தலைப்பு 117 - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 117 - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவைகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஒக்தோபர் 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பில் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின், பொது திறைசேரியின் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின்

பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால்

இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மூலதன செலவுகள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மூலதனச் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	வருடாந்த பாதீட்டின் மூலம் 2024 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் பேதான அபிவிருத்தி நடவடிக்கைகள் - நிறுவகரீதியாக உதவியளிக்கும் செலவு விடயம் 117-2-08-001-2201 இன் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர் சம்பளம் மற்றும் மீண்டுவரும் செலவுகளுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டிற்காக 2023 இன் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரசட்டத்தின் மூலம் அதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.	வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சம்பளங்கள் மற்றும் கூலிகள் கொடுப்பவிற்காக 2024 ஆம் ஆண்டிற்கு நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்காக 2023-08-23 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 117-2-8-4-2201 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் நிதி ஏற்பாடு வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் 2024 ஆம் ஆண்டிற்காக தேசிய பாதீட்டு திணைக்களத்தின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதானது 117-2-04-001-2001 மற்றும் 2104	பாராளுன்றத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள வரம்புகள் மற்றும் நிதிப்பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுககு இணக்கமற்ற வகையில் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அபிவிருத்தி நடவடிக்கைகள் - வீதி அபிவிருத்தி செலவு விடயம் இலக்கம் 117-2-04-001-2001 மற்றும் 2104 இன் கீழ் கட்டிடம் மற்றும் நிர்மாணங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 23,000 மில்லியன் நிதி ஏற்பாட்டில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 20,749.81 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 9,500 மில்லியன் அதாவது 46 சதவீதம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சம்பளம் மற்றும் கூலிகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது.
இதற்கிணங்க 2023 இன் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் மூலம் 2024 ஆம் ஆண்டிற்காக செலவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த குறிக்கோள்களை கருத்தில் கொள்ளாது மூலதன நிதி ஏற்பாட்டின் மூலம் மீண்டுவரும் தன்மையான ஒரு செலவான சம்பளமும் கூலியும் கொடுப்பனவு செய்வதற்காக அமைச்சினால் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அபிவிருத்தி நடவடிக்கை - வீதி அபிவிருத்தி 117-2-04-001-2104 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளலாக ரூபா 82,318.40 மில்லியன் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதனுள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சம்பளமும் கூலியுமாகச் செலுத்தப்பட்ட ரூபா 7,600 மில்லியன் மீண்டுவரும் செலவுகள் மூலதனமாக்கப்பட்டிருந்தன. என்ற செலவு விடயத்தின் மூலமாகும். அச்செலவு விடயத்தினை திருத்தம் செய்வது தொடர்பாக 2024 வருடாந்த மதிப்பீட்டு புத்தகத்தில் அடிக்குறிப்பின் மூலம் காட்டப்பட்டுள்ளது. மேலும் 117-2-04-001-2104 செலவு விடயத்தின் கீழ் வீதி அபிவிருத்தி தொடர்பாக உத்தியோகத்தர்களின் சம்பளத்தை கொடுப்பனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ஒரு மூலதனச் செலவாக உரிய வீதிகளுக்கு மூலதனமாக்குமாறு இது சம்பந்தமாக விசாரணை செய்த போது ஆலோசனை வழங்கப்பட்டது.

(ஆ) வைப்புக்கள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக் கொடுப்பனவுகள் மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் போக்குவரத்துப் பிரிவு மற்றும் நெடுஞ்சாலைகள் பிரிவிற்காக தனித்தனியாக 08 வைப்புக் கணக்குகள் பேணப்பட்டிருந்தும் அக்கணக்குகளுக்குரிய பிரிவுகளை அடையாளங்காணக்கூடிய வகையில் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	பிரதான பிரிவினை அடையாளம் காணக்கூடிய வகையில் குறிப்புக்களை ஈடுபடுத்தி அடுத்துவரும் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் பொது வைப்புக் கணக்குகளை சமரப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.	அமைச்சின் ஒவ்வொரு பிரிவுகளின் வைப்புக் கணக்கினை தனித்தனியாக அடையாங்காணக்கூடிய வகையில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு மற்றும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சான்றுபடுத்தும் உத்தியோகத்தர்களினால் அவற்றின் முழுமையான தன்மை மற்றும் இணங்கியிருத்தல் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கான உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

(இ) நிதியற்ற சொத்துகள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய நிதியற்ற சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ/சுற்றறிக்கை ஆம் இலக்க 2013 யூலை 12 ஆந் திகதிய கூற்றறிக்கையின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்களை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். எவ்வாறாயினும்	முன்னைய ஆண்டுகளில் செலவு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்படாத வேலைகளை மூலதனமாக்கும் போது ஒட்டுமொத்த பெறுமதியும் கொள்வனவு செய்தலாக பதிவுசெய்யப்படும். அவ்வாறே 2506 நிகழ்சித்திட்டத்தின் கீழ் நடைமுறை ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசடட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தி சுற்றறிக்கையின் பிரகாரம்

	மீளாய்வாண்டில் செலவு விடய இலக்கம் 2101 (வாகனம்), 2102 (மனைப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்), 2103 (இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள்) 2104 (கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள்), 2105 (காணிகள் மற்றும் கட்டிடங்களை மேம்படுத்துதல்கள்), 2106 (மென்பொருள் அபிவிருத்தி) மற்றும் 2506 (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்) என்பவற்றின் கீழ் ரூபா 235,397.81 மில்லியன் அமைசசினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி மூலகங்களிலிருந்து செலவு செய்யப்பட்டிருந்தும் 2024 ஆம் ஆண்டிற்கான நிதியற்ற சொத்துககளை மாற்றுதல் (Transfer in) மற்றும் கொள்வனவு செய்தல்களாக (Parchase) ரூபா 226,748.99 மில்லியன் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2024 ஆம் ஆண்டின் போது மூலதனச் செலவாக செலவு செய்யப்பட்டிருந்த ரூபா 8,648.82 மில்லியனிற்குரிய நிதியற்ற சொத்துக்கள் அடையாளம் கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	செலவுகள் நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படுவதில்லை. 2024 ஆம் ஆண்டில் மாவட்ட செயலகத்திற்கு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்து நிர்மாணிக்கப்பட்ட கிராமிய வீதி ஆண்டின் இறுதியில் தகவல்களை சமர்ப்பிப்பதிலுள்ள தாமதத்தினால் 2024 ஆம் ஆண்டிற்கான நிதியற்ற சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்படாததுடன் அவை 2025 ஆம் ஆண்டில் ஆரம்ப மீதிக்கான சேர்த்தல்களாக உள்ளடக்கப்பட்டிருந்தன.	சொத்துக்களை அடையாம்கண்டு கணக்கீடு செய்தல் இடம்பெறுகின்றது என உறுதிப்படுத்தும் வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்தி எழுத்துமூலம் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.
(ii)	போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பிரதான நிதி உத்தியோகத்தரின் MOH /HWY/ACC29/2022/07 ஆம் இலக்க 2024 மே 16 ஆந் திகதிய "முடிவுறாத வேலைகளை கணக்கீடு செய்தல் - 2023 ஆம் ஆண்டு" என்ற தலைப்பிலான கடிதத்தின்	2023 திசெம்பர் இறுதி கணனி அறிக்கைகளிலிருந்து அடையாளம் காணப்பட்ட செலவுகளை வழங்குகின்ற திகதி வரை 2023 நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கான இயலுமை இல்லாததனால் ஆரம்ப மீதிக்கு சேர்த்தல்களாக 2024 ஆம்	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது இந்நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்காக விசேட கவனம்

	பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமுல்ப்படுத்தப்பட்ட அனைத்து செயற்திட்டங்களுக்குரிய செலவுகளும் நிதியற்ற சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுளளது என குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்று 2024 (ஏசீஏ 6) இல் ஆரம்ப மீதிக்கு சேர்த்தல்களாக (Opening Balance Addition) பேரேட்டு கணக்கு இலக்கம் 9160-1-4- முடிவுறாத வேலை - கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கீழ் ரூபா 1,494.21 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதி வரை 2506 - உபகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செலவு விடயத்தின் கீழ் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவுகளை கணக்கீடு செய்தல் இன்று வரை முடிவடைந்திருக்காததுடன் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக பிழையான மற்றும் ஏமாற்றுகின்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.	ஆண்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் சில செயற்திட்டங்களின் IPC களிடமிருந்து நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என அடையாளம் காணப்பட்டதன் பின்னர அவற்றினை முன்னர் முடிவுறாத வேலைகளின் கீழ் கணக்கீடு செய்திருந்ததனால் அதிலிருந்து நீக்கி உரிய சொத்துக்களுக்கு ஆரம்ப மீதிக்கான சேர்த்தல்களின் கீழ் உள்ளடக்கி சரி செய்யப்பட்டது. அது பதியப்பட்ட சொத்துக்களின் குறியீட்டினை மாற்றுதல் மாத்திரமாகும்.	செலுத்தி உரிய செலவுகளை காலரீதியாக நிதியற்ற சொத்துக்களின் கீழ் உளளடக்குவதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்காக எழுத்துமூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும்.
(iii)	மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் போக்குவரத்து அமைச்சின் பெயரில் பதிவுசெய்துள்ள 07 கார்கள், ஒரு லொறி, 02 மோட்டார் சைக்கிள்கள்	13 வாகனங்கள் காணாமல் போனமை சம்பந்தமாக 2024-06-24 ஆந் திகதி தலங்கம பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடு தொடுக்கப்பட்டுள்ளதுடன்	வாகனங்கள் காணாமல் போனமை சம்பந்தமாக விசாரணைகளை நடாத்தி பொறுப்புக்களைச் செய்யத்தவறியுள்ள

	என்பனவாக 10 மோட்டார் வாகனங்கள் தொடர்பான தகவல்களை தேடிக்கண்டு பிடிப்பதற்கு முடியாதிருந்ததுடன் அந்த வாகனங்கள் அமைச்சின் பொறுபபில் பௌதீகரீதியாக காணப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டதுடன் இந்த வாகனங்களின் பெறுமதி அமைச்சின் சொத்துக்கள் கணக்கிற்கும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	அந்த வாகனங்களுக்கு மத்தியில் 03 வாகனங்களின் பதிவுசெய்தல் உரிமையானது இரத்துச் செய்யப்பட்டது.	உத்தியோகத்தர்கள் சம்பநதமாக தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியில் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	போக்குவரத்து , நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் நெடுஞ்சாலைகள் பிரிவிற்குரிய வாகனங்கள் சம்பந்தமான தகவல்களை விசாரித்தமை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட MOH/HWY/ADM-19-AUDIT/2020(III) ஆம் இலக்க 2025 ஏப்ரல் 23 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் KX-5322, CAQ-1764, PH-0991, PC-7214 மற்றும் PB - 9827 ஆகிய பதிவுசெய்தல் இலக்கங்களைக் கொண்ட வாகனங்கள் அமைச்சிடம் காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்கள் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	அமைச்சின் இந்த வாகனங்கள் கிராமிய வீதி அமைச்சிற்குச் சொந்தமாக இருந்ததுடன் அதனை நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் இணைத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் நெடுஞ்சாலைகள் பிரிவின் சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்குவதற்கு தாமதித்துள்ளது. உரிய வாகனத்தை நிர்ணயிக்கப்பட்டவாறு சொத்துக்கள பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழ் முறைமையை மீளாய்வு செய்யும் போது இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்காக விசேட கவனம் செலுத்தப்பட்டு வாகனக் கட்டுப்பாட்டிற்கான உள்ளகக் கட்டுபாட்டினை அறிமுகப்படுத்தி எழுத்துமூலம் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.
(v)	அமைச்சினால் வருடாந்த பொருள் மீளாய்வினை மேற்கொள்ளும் போது சிகாஸ் நிகழச்சித்திட்டத்தில் சொத்துக்கள் அறிக்கைகளில் குறிப்பிட்ட சொத்துக்கள் மற்றும் குறியீட்டு இலக்க பட்டியலைப் பயன்படுத்தாது உரிய மீளாய்வு நடவடிக்கை	சொத்துக்கள் அறிக்கையில் குறிப்பிட்ட குறியீட்டு இலக்க பட்டியலானது அனைத்து பொருள் மீளாய்வுக் குழுக்களுக்கும் வழங்கப்பட்டதுடன் அக்குறியீட்டு இலக்கம் ஒட்டப்படாத அனைத்து பொருட்களிலும் அந்த	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழ் முறைமைகளை மீளாய்வு செய்யும் போது இந்த நிலைமைகளைத்

	மேற்கொள்ளப்பட்டதனால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏசீஏ - 6 நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் குறிப்பிட்ட ரூபா 4,850.79 மில்லியன் தொகையான வாகனங்கள் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் சரியாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	இலக்கத்தை ஒட்டுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும் எதிர்வரும் காலங்களில் இந்த சிகாஸ் குறியீட்டு இலக்கத்தினைப் பயன்படுத்திக் கொளளுமாறும் அனைத்து பிரிவுகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டது.	தவிர்த்துக்கொள்வதற்காக விசேட கவனம் செலுத்தி பொருள் மீளாய்வு நடவடிக்கைகளை சரியாக மேற்கொள்வது தொடர்பாக எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.
(vi)	**குருனாகல் - ஹபரனை புகையிரத செயற்திட்டம்**		
I.	செயற்திட்டத்தின் மூலம் அமைச்சிற்கு ஒப்படைத்த சொத்துக்கள் பட்டியலிலுள்ள பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய சொத்துக்களின் 338 அலகுகளை அமைச்சு பொறுப்பேற்றிருந்தும் அவற்றில் சொத்துக்களின் 26 அலகுகள் காணப்படுகின்ற இடங்களை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே அமைச்சு பொறுப்பேற்ற சொத்துக்கள் விடயங்களில் ஒரு பகுதி 2023 ஆம் ஆண்டின் போது அமைச்சிற்கு வெளியேயுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் அமைச்சின் சொத்துக்களை பதிவேட்டிலிருந்தும் கணக்குகளிலிருந்தும் நீக்குவதற்கு	இச்செயற்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் பௌதீகரீதியாக புகையிரதத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் தற்பொழுது அச்சொத்துக்கள் புகையிரத திணைக்களத்தின் சொத்துக்களுக்கு உள்ளடக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதுடன் அச்சொத்துக்களின் பெறுமதி அக்கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தியதன் பின்னர் இந்த அமைச்சின் கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழ் முறைமைகளை மீளாய்வு செய்யும் போது விசேட கவனம் செலுத்தி சொத்துக்களை ஒப்படைத்தல் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்காக எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.

	நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
II.	செயற்திட்டத்தினால் அமைச்சிற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்த பதிவேட்டுப் பொருட்கள் அமைச்சின் பல்வேறு பிரிவுகளினால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் பிரிவிற்கு முறைப்படியாக ஒப்படைப்பதற்கு, பொறுப்பேற்பதற்கு மற்றும் அச்சொத்துக்கள் அனைத்தையும் ஒழுங்குமுறையாக இருப்பேட்டிற்கு கொண்டுவருவதற்கும் கணக்குகளில் உள்ளடக்கபடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அனைத்து சொத்தக்களும் அமைச்சின் பிரதான பொருள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனித்தனியாக அடையாளங்கண்டு உப பொருள் இருப்பு பதிவேட்டிற்கு ஒப்படைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமையின் மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தி பொருட்களை முறைப்படியாக ஒப்படைத்தல், பொறுப்பேற்றல் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.
(vii)	மீளாய்வாண்டிற்காக வரிசை அமைச்சிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கட்டுநிதியை விடுவிப்பதனை பதிவுசெய்யும் பதிவேடு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அப்பணத்தை 2024 இறுதித் திகதியில் செலவு செய்துள்ள முறைமையை வரிசை அமைச்சிற்கு தெரியப்படுத்துவதற்காக தயாரித்த பட்டோலைகளின் பிரகாரம் 05 செலவு விடயங்களுக்கு இடையே ரூபா 5,652.68 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	கருத்துரை தரப்படவில்லை.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தி நிதி அறிக்கையிடல் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஈ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே தரப்படும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i) பிணக்குகளை தீர்க்கும் நடைமுறைகள மேற்கொள்ளல்		
ஒப்பந்த உடன்படிக்கையில் தொழில்தருனருக்கும் ஒப்பந்தக்காரருக்குமிடையே உருவாகிய பிணக்குகளை தீர்த்துவைப்பதற்காக ஈடுபடும் போது உருவாகின்ற கூடிய பொறுப்புக்கள் சம்பந்தமாக முறையான அறிக்கைகளைப் பேணுதல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நெடுஞ்சாலைகள் பிரிவினால் 2005-2024 காலப்பகுதிக்குள் அமுல்ப்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்களின் பிணக்குகளை தீர்த்துவைப்பது சம்பந்தமாக அவ்வாறான முறைப்படியான அறிக்கை பேணபபடாமையின் காரணமாக அதன் மூலம் உருவாககூடிய பொறுப்புக்களின் அளவு மற்றும் தன்மை தொடர்பாக அடையாளம் காண்பதற்கு முடியாதிருந்தது. மேற்கூறிய விடயத்தின் மூலம் உருவாகக்கூடிய பொறுப்புக்கள் தொடர்பாக வருடாந்த நிதிக்கூற்றுகளில் மேற்கொள்ளக்கூடிய	கருத்துரைக்கப்படவில்லை.	தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காக பேணப்பட வேண்டிய அறிக்கையில நிர்ணயிக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.

வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நெடுஞ்சாலைகள் பிரிவில் இத்துறைக்குரிய உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

(ii)	வரிசை அமைச்சு 2025 ஏப்ரல் 04 ஆந் திகதி நடாத்திய கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்ட குறிப்பு இலக்கம் 03(iii) இற்கு இணங்க 100,000 கிலோ மீற்றர் செயற்திட்டத்தின் வேலைக்கு முன்னைய முற்பணங்களின் அளவானது 34 ஒப்பந்தங்களுக்காக அறவீடு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட வேலை முற்பணப் பெறுமதி ரூபா 340.20 மில்லினுக்காக அதிகாரசபையின் சட்டப் பிரிவின் மூலம் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தும் 2025 மே 02 ஆந் திகதி வரையும் சட்டப்பிரிவில் தேவையான தகவல்கள் இல்லாமையால் அவ்வாறான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கணக்காய்விற்கு பிரதிப் பணிப்பாளர் நாயத்தினால் (சட்டம்) RDA/LD/LBF&RRP ஆம் இலக்க 2025 ஏப்ரல் 30 அந் திகதிய கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க வேலைக்கு முன்னைய முற்பணங்களை அறவீடு செய்யும் ஆபத்து காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.	100,000 கி.மீற்றர் செயற்திட்டத்தின் வேலைக்கு முன்னைய முற்பணமாக அறவீடு செய்வதற்கு மிகுதியாக உள்ள ஒப்பந்தங்களுக்காக சட்ட ரீதியான ஆலோசனைகளை வழங்குமாறு 2024-08-26 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சட்டப் பிரிவிற்கு தெரியப்படுத்தியிருந்ததுடன் அதற்காக வேண்டப்பட்ட தகவல்கள் 2024-11-27 ஆந் திகதி சட்டப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மீண்டும் சட்டப் பிரிவின் மூலம் வேண்டிக்கொள்ளப்பட்ட தகவல்கள் மாகாண அலுவலகத்தினூடாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டியுள்ளதனால் அத்தகவல்களை ஒன்று சேர்த்தல் இடம்பெறுகின்றது.	முற்பணங்களைச் செலுத்துதல், அறவீடு செய்தல், பிணைகளின் காலத்தை நீடித்தல் முதலிய ஒப்பந்த நிருவாக நடவடிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளை மீறி மேற்கொள்வது சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iii)	நிதிப்பிரமாணம் 565(2) இன் பிரகாரம் கிடைத்த மற்றும் செலுத்திய அனைத்து வைப்புக்களும் பேரேட்டில் பெறவேண்டிய கணக்குகளின் கீழ் நாளாந்தம் உள்ளடக்கப்படுதல் வேண்டும். எந்தவொரு நேரத்திலும் குறித்த ஒரு கணக்கினை இலகுவாக பார்க்க கூடிய வகையில் பேரேட்டில் கவனமாக இலக்கமிடப்பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் 6000-0-0-016-0-153-0 ஆம் இலக்க ஒப்பந்தத்திற்காக நிறுத்திவைத்தல் பணக் கணக்கின் கீழ் கிராமிய வீதிகள் மற்றும் பாலங்களுக்கான இரண்டு வைப்பு புத்தக கணக்குகள் அமைச்சினால் பேணப்படுவதுடன் அக்கணக்குப் புத்தகங்களை பரீட்சித்த போது மாதாந்தம் கணக்குகளைச் சமப்படுத்துதலானது ஒழுங்குமுறையாக செய்யப்பட்டிருக்கவில்லை.	மாதாந்தம் பொது வைப்புக் கணக்கினை சமப்படுத்தலினை CIGAS காசுப் பிரதிகளுடன் ஒப்பிட்டு CIGAS அச்சுப் பிரதி வைப்பு பேரேட்டில் ஒட்டப்பட்டுள்ளது வைப்பில் அளவு அதிகமானது என்பதனால் மீதியை உறுதிப்படுத்துவதற்காக தனியாக கணக்கின் மூலம் கணக்கு குறிப்புக்களும் பேணப்பட்டுள்ளன.	-மேற்படி-

(உ) கணக்காய்வு சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நம்பற்தமான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	நிதியற்ற சொத்துக்கள் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டில் முடிவுறாத வேலைகள் - கட்டிடங்களும் நிர்மாணங்களும், நெடுஞ்சாலைகள், பாலங்கள், பயணிகள் வாகனங்கள் என்பன உள்ளடங்கலாக ஒவ்வொரு சொத்துக்கள் தொகுதியின் கீழ் ரூபா 153,998.53 மில்லியன் சொத:தக்கள் நீக்கப்பட்டது என	ஏசீஏ 6 படிவத்தில் ஆண்டின் போது ஒவ்வொரு தொகுதியின் கீழான சொத்துக்களை நீக்குதல்களின் மொத்தமான ரூபா 153,998.53 மில்லியனின் பட்டோலையை சமர்ப்பிப்பேன். பல தடவைகள் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு சென்று	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமையை மீளாய்வு செய்யும் போது விடே கவனம் செலுத்தி சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்வது

	அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறு நீககப்பட்ட சொத்துக்களை அடையாளம் காண்பதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் தேவையான பட்டோலைகள் மற்றும் நீக்கப்பட்ட ஒவ்வொரு சொத்தினையும் தனித்தனியாக காட்டும் பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் காரணமாக அதன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்களின் சரியானதன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	CIGAS நிதியற்ற சொத்துக்கள் மொடியூலிலுள்ள வித்தியாசம் சரிசெய்யப்பட்டதனால் அப்பெறுமதியை ஒவ்வொரு விடயத்தின் கீழ் அடையாளம் காண்பது சிக்கலாக உள்ளது.	தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.
(ii)	அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்தல் சம்பந்தமாக 2013 யூலை 12 ஆந் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் குறியீட்டு இலக்கம் 611201 இன் கீழ் அலுவலக கட்டிடம் ரூபா 15,953.95 மில்லியன் மற்றும் குறியீட்டு இலக்கம் 6113301 இன் கீழ் கணனி மென்பொருட்கள் ரூபா 200.52 மில்லியனாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதியை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கபபடவில்லை. அதன் காரணமாக அதன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	ஏசீஏ படிவத்தில் நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் குறியீட்டு இலக்கம் 611201 இன் கீழ் அலுவலக கட்டிடங்கள் ரூபா 15,953.95 மில்லியனாகவும் குறியீட்டு இலக்கம் 6113301 இன் கீழ் கணனி மென்பொருட்கள் ரூபா 52,200 மில்லியனாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்கீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்களை உறுதிபபடுத:தம் ஆவணம் பின்னிணைப்பு 08 இல் தரப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமையை மீளாய்வு செய்யும் போது விடே கவனம் செலுத்தி சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்வது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.

(iii) 2024 திமெம்பர் 31 இல் உள்ளவாறு நிதயற்ற சொத்துக்கள் கூற்றில் 1.3 - ஏனைய நிர்மாணங்கள், 1.4 - முடிவுறாத வேலைகள் - கட்டிடங்களும் நிர்மாணங்களும் மற்றும் 4.1 - கட்டிடங்கள் ஆகிய சொத்துககள் தொகுதியின் கீழுள்ள ரூபா 151,827.9 மில்லியனான சொத்துக்கள் விடயத்திலிருந்து நீக்குதல்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் இச்சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டது என்பதற்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டது என்பதற்கும் முறைப்படியான ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அமைச்சின் நிதியற்ற சொத்துக்களின் கீழ் அபிவிருத்தி செயற்திட்டங்களின் செலவுகளை கணக்கீடு செய்ததன் பின்னர் செயற்திட்டங்களை முடிவுறுத்தும் போது அச்சொத்துக்களை வீதி அபிவிருத்ததி அதிகாரசபைக்கு ஒப்படைத்தல் முறைப்படியாக இடம் பெறுவதுடன் மத்திய அதிவேக வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கட்டம் 02 இன் சொத்துக்கள் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.	தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழ் முறைமைகளை மீளாய்வு செய்யும் போது சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி சொத்துக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை நிர்ணயித்து எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.
(iv) நெடுஞ்சாலைகள் பிரிவினால் 2005 - 2024 காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்திட்டம் சம்பந்தமாக சில ஒப்பந்தக்காரர்களால் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் அவ்வாறு பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்காக ஒவ்வொரு செயற்திட்டம் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் எடுக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் அவ்வாறு பிணக்குகளை தீர்த்துவைப்பதற்காக அச்செயற்திட்டங்களால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		

I	மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக RAH/A/MOH/INF/2024/02 ஆம் இலக்க 2024 திசெம்பர் 04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்வினால் கோரப்பட்ட தகவல்கள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரின் MOH/ACC/13/2024/04 ஆம் இலக்க 2025 சனவரி 10 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய கடிதத்திற்கு இணங்க 12 செயற்திட்டங்கள் தொடர்பாக ஒவ்வொரு செயற்திட்ட பணிப்பாளரினால் சமர்பித்த அறிக்கைகள் பின்னிணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அதனுள் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் 2005 - 2024 காலப்பகுதியில் அமுல்ப்படுத்தப்பட்ட அனைத்து செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்களும் உள்ளடக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	கருத்துரை தரப்படவில்லை.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமையை மீளாய்வு செய்யும் போது அந்த அதிகாரச் சட்டத்தின் 7(1)(அ), 38(1)(ஆ), (உ) 42(அ), (இ) ஆகிய பிரிவுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுத்தலினை உறுதிப்படுத்தும் வகையிலான உள்ளகக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தி எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.

II.	மேற்கூறிய ஒவ்வொரு செயற்திட்டத்திற்குரிய பட்டோலைகளைப் பரீட்சித்த போது குறைபாடுகளுடனான அத்தகவல்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என மேலும் அவதானிக்கப்பட்டள்ளதுடன் ஒன்றிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் தகவல்களை எதிர்வரும் காலங்களில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் இன்றுவரை உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	கருத்துரைகள் தரப்படவில்லை.	-மேற்படி-
(v)	மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனி) கம்பனியால் 2020 ஆம் ஆண்டில் 100,000 கிலோ மீற்றர் வீதிச் செயற்திட்டத்தின் வீதி நிர்மாண செயல் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்காக மாகாண, மாவட்ட மற்றும் வலய ஒருங்கிணைப்பாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் ஒருங்கிணைப்பாளர்களுக்கு கொடுப்பனவாக ரூபா 16 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒருங்கிணைப்பாளர்களை சேர்த்துக்கொள்வதற்கு ரிய தகவல்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களால் ஒருங்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே தகமையுள்ள நபர்கள் முறையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்களா மற்றும் செயல்	கருத்துரை தரப்படவல்லை.	தகமைபெற்ற நபர்கள் முறைப்படியாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்களா மற்றும் செயல் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்ததன் பின்னர் ஒருங்கிணைப்பாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக பரீட்சிப்புக்களை நடாத்தி பொறுப்புக்களை நிவைவேற்றத் தவறியுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்ததன் பின்னர் ஒருங்கிணைப்பாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டதா என்பதனை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்டதாகும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 முற்பணம் வழங்குதலும் தீர்த்துவைத்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் வருடாந்த நிதி ஏற்பாட்டின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அமைச்சினால் அவ்வப்போது கட்டுநிதி விடுவிககப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வருடாந்த நிதி ஏற்பாட்டின் கீழ் விடுவிக்கப்படுகின்ற கட்டுநிதியை தீர்த்துவைக்கும் போது கட்டுநிதியை பெற்றுக்கொண்ட செயற்திட்டம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அந்த முற்பணங்களை செலவு செய்த முறைமை தொடர்பாக	போக்குவரத:து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களின் நிதி முகாமைத்துவமானது என்னால் நியமிக்கப்படுகின்ற செயற்திட்ட பணிப்பாளர் மறறும் கணக்காளரினால் மேற்கொளளப்படுவதுடன் அவர்கள் பொறுப்பு வாய்ந்த அனுபவத்துடனான உத்தியோகத்தர்களாகும். எனவே அமைச்சினால் ஆரம்பத்திலிருந்தே உப அலுவலகமாக செயற்படுகின்ற வீதி அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் வீதி அபிவிருத்தி	தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழுள்ள முறைமை மீளாய்வின் பொது விசேட கவனம் செலுத்தி செலவுகளை அங்கீகரிக்கும் போது மற்றும் சான்றுபடுத்தும் போது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இடம்பெறுகின்றது என்பதனை உறுதிப்படுத்தி உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பொழிப்பாக்கிய ஆவணம் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு அமைச்சினால முற்பணங்களை தீர்த்துவைக்கும் வவுச்சரின் மூலம் ஒவவொரு செலவு விடயத்திகுரிய செலவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அமைச்சினால் நி.பி 137 இன் பிரகாரம் செலவுகளை அங்கீகரிக்கும் போது மற்றும் நி.பி 138 இன் பிரகாரம் செலவுகளை சான்றுபடுத்தும் போது கவனித்துப்பார்க்க வேண்டிய விடய்ஙகள் தொடர்பான விபரம் இந்த பொழிப்பாக்கிய ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டடிருக்கவில்லை. அதற்கிணங்க செலவு செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தங்களுக்குரிய உடன்படிக்கை இலக்கம், ஒப்பந்தத்திற்கான கொடுப்பனவு ஆவணம், சான்றுபடுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதி, ஒப்பந்தத்தின் பகுதியை பூர்த்தி செய்ய வேண்டிய கால எல்லை, செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டினை மிகைத்து செலவு செய்யப்பட்டுள்ளதா ஆகிய விடயங்கள் தொடர்பாக கவனித்துப் பார்க்காது இச்செலவுகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இக்கொடுப்பனவுகளுக்குரிய ஆவணங்களை உள்ளடக்கிய கோவைகள் தொடர்பான தொடர்பு இலக்கம் கட்டுநிதியை தீர்த்துவைக்கும் வவுச்சர்களில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் அமைச்சின் வருடாந்த நிதி ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற மூலதனச் செலவுகள் சம்பந்தமாக முறையான அறிக்கை பேணப்படாது அதிகாரசபைக்கு கையிலுள்ள விலைப்பட்டியல்களுக்காக கட்டுநிதி விடுவிக்கப்படுவதுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற மாதாந்த செலவு அறிக்கையின் மூலம் முற்பணங்கள் செலவுகள் கணக்கீடு செய்யப்படும்". அனைத்த கணக்கு பிரிவுகளின் மூலமும் மாதாந்த நிதி ஏற்பாட்டு நிலைமை மற்றும் அதுவரை வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் செலவு செய்யப்பட்டுள்ள முறைமை தொடர்பான அனைத்து விபரங்களுடன் மாதாந்த செலவு அறிக்கை, கட்டுநிதி தேவைப்பாடு தொடர்பான அறிக்கை என்பன பெற்றுக்கொள்ளப்படுவதுடன் அந்த அறிக்கையினை கணகாணிப்பு செய்து செலவு விடயங்களின் மிகுதி நிதி ஏற்பாட்டினை பரீட்சித்து கட்டுநிதி வழங்கப்படும்.

அவ்வாறே மாதாந்த அறிக்கையினைப் பரீட்சித்து தேவையான அறிவுறுத்தல்களும் அவ்வப்போது வழங்கப்படுவதுடன் வழங்கப்படுகின்ற கட்டுநிதி விடுவிப்பு சம்பந்தமாக வாராந்தம் உரிய வங்கி கணக்குகளின் மீதிகள் இலங்கை வங்கியின் மூலம் பெற்று வாராந்தம் வங்கி மீதிகள் கண்காணிப்பு செய்யப்படும்.

கொடுப்பனவு செய்து செலவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

3.2 செலவு முகாமைத்துவம்

வருடாந்த பாதீட்டினைத் தயாரித்தல், நிதி ஏற்பாட்டினை மாற்றுதல், குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்ளல், பயன்படுத்துதல் மற்றும் சேமிப்புக்கள் சம்பந்தமாக பின்வரும் கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	மத்திய அதிவேக வீதி பகுதி 01 - கடவத்தையிலிருந்து மீரீகம வரையான செயற்திட்டம் (கட்டிடங்களும் நிர்மாணங்களும்), ஐ.அ.கு டொலர் 318 மில்லியன் மிகுதியாக உள்ள இந்திய கடன் திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்து சபைக்கு 600 பஸ்களை கொள்வனவு செய்யும் செயற்திட்டம் (வாகனம்), மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதி மற்றும் பாலங்களை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டம் (கட்டிடங்களும் நிர்மாணங்களும்), தேசிய நெடுஞ்சாலைகளில் 25 பாலங்களை புனரமைப்புச் செய்யும் செயற்திட்டம் (கட்டிடங்களும் நிர்மாணங்களும்), கொகுவல மற்றும் கெடம்பேயில் இரண்டு மேம்பாலங்களை திட்டமிட்டு நிர்மாணிக்கும் செயற்திட்டம் (கட்டிங்களும் நிர்மாணங்களும்) என்பவைகள் உள்ளடங்கலாக 15 மூலதன செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 59,994.90 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்படாது மிகுதியாக இருந்தது. கடன் முகவர் நிறுவனத்தினால் கடன்	அமைச்சு செலவு தலைப்பின் கீழ் 15 மூலதன செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 59,994.90 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்படாது சேமிப்பாக இருந்தது.	சரியான முன்அறிதலுடன் செலவு மதிப்பீட்டினைத் தயாரித்து காலரீதியாக நாளதுவரையாக்குதல் வேண்டும்.

	நிறுத்தப்பட்டதனால் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமையின் காரணமாக இந்த நிதி ஏற்பாடு சேமிப்பாக இருந்தது.		
(ii)	அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (117-02) பேராதெனிய - பதுளை - செங்கலடி வரையான பகுதியை புனரமைப்புச் செய்யும் செயற்திட்டம் (கட்டிடங்களும் நிர்மாணங்களும்), ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் - 1 (கட்டிடங்களும் நிர்மாணங்களும்), வீதிகளை விரிவுபடுத்தலும், மேம்படுத்தலும் - கிளிநொச்சி மாவட்டம் (கட்டிடங்களும் நிர்மாணங்களும்), கொம்பனி வீதி புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் மற்றும் உத்தரானந்த மாவத்தையில் புகையிரத பாதைக்கு மேலே மேம்பாலத்தினை நிர்மாணித்தல், காணியை மேம்படுத்துதல் மற்றும் தேசிய வீதிமுறைமையில் உடைந்த பாலங்களை புனரமைப்புச் செய்தல் (கட்டிடங்களும் நிர்மாணங்களும்) உள்ளடங்கலாக 16 மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் சேமிப்புக்கள் 50 சதவீதத்தியிருலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.	திட்டமிட்டவாறு கட்டுநிரிதயை செலுத்துவதற்கு முடியாமை 117-2-3-15-2104-0/11 ஆம் இலக்க செயற்திட்டத்தின் வேலைகளை நிறுத்திவைத்தல், பாதகமான காலநிலைமையின் காரணமாக செயற்திட்டம் தாமதமடைதல் மற்றும் எதிர்பார்த்தவாறு வேலைகளை பூர்த்திசெய்து இறுதி விலைப் பட்டியல்களை (SAC) கொடுப்பனவு செய்வதற்கு சமர்ப்பிக்காமை, விலைப்பட்டியல்களை சமர்ப்பிப்பதற்கு தாமதித்தல் OA வீதியில் 1/9 ஆம் இலக்க பாலத்தை மீள நிர்மாணிக்க ஒப்பந்தம் வழங்குதல் தாமதித்தல், பொதுச் செயற்பாட்டுச் செலவுகளை குறைத்தல், காணிகளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையில் எதிர்பார்த்த காலத்தினை விட அதிக காலம் எடுத்தல் ஆகிய விடயங்களின் காரணமாக நிதி ஏற்பாடு சேமிப்பாக இருந்தது.	-மேற்படி-
(iii)	55 செலவு விடயங்களுக்காக தொடக்க செலவு மதிப்பீடு ரூபா 12,738.10 மில்லியனாக இருந்ததுடன் திருத்திய செலவு மதிப்பீடு ரூபா 10,616.34 மில்லியனாகும். அதற்கிணங்க தொடக்க செலவு மதிப்பீட்டிற்கும் திருத்திய செலவு மதிப்பீட்டிற்குமிடையே ரூபா 12,118.20 மில்லியன்	முன்னுரிமைக்கு இணங்க நிதி ஏற்பாட்டினை அங்கீகரித்து ஒட்டுமொத்த நிதி ஏற்பாட்டிற்குள் முகாமைத்துவம் செய்வதற்கு தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து ஆலோசனை கிடைத்துள்ளதனால் அத்தியவசியமான	-மேற்படி-

	வித்தியாசமானதுடன் அது தொடக்க செலவு மதிப்பீட்டில் சதவீதமாக 50 சதவீதத்திலிருந்து 12,071 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.	செலவுகளுக்கான நிதி ஏற்பாடு நி.பி 66 இன் மூலம் முகாமைத்துவம் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.	
(iv)	03 செலவு விடயங்களில் மிகுதியாக உள்ள நிதி ஏற்பாடானது நி.பி 66 இன் கீழ் நிதி ஏற்பாட்டு மாற்றுதல்கள் பெறுமதியினை மிகைத்து காணப்பட்டது. அதற்கிணங்க முறையாக மதிப்பீடு செய்யப்படாது நி.பி 66 இன் கீழ் நிதி ஏற்பாட்டினை மாற்றுதல் இடம்பெற்றிருந்தது என அவதானிக்கப்பட்டது.	எதிர்பார்த்தவாறு செலவுகள் உருவாகியிருக்காமை, முன்னறிந்து கொள்ளப்பட்டவாறு 2024-12-31 ஆந் திகதியில் விலைப்பட்டியல்கள் கிடைக்காமையின் காரணமாக நிதி எற்பாடு மிகுதியாக இருந்தது.	சரியான முன்னறிதலுடன் செலவு மதிப்பீட்டினை தயாரிப்பதன் மூலம் நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் மாற்றுதல்களை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	நி.பி 128(1)(ஓ) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது ஒரு செலவு அல்லது பொறுப்பு கடப்பாடாக இருந்த போதிலும் தமது நோக்கெல்லை அல்லது வரம்புகள் அல்லது ஏனைய அதிகாரமளிக்கின்ற நிதி ஏற்பாட்டிற்குள் வருகின்றது எனவும் அது போதியளவான அதிகாரத்தினால் உள்ளடக்கப்படுகின்றது எனவும் உறுதிப்படுத்தலானது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் வழக்கமான பொறுப்பாக	செயற்திட்ட செயற்பாட்டு குழுவில் அந்த அனைத்து விடயங்களும் கண்காணிப்பு செய்யப்படுகின்றது. நிதி ஏற்பாட்டினை மிகைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை மேற்கொள்ள முடியாது என வருடாந்த செலவுகளுக்கான அதிகாரத்தை வழங்குவதன் மூலம் அறிவுறுத்தலினை வழங்கி வலியுறுத்தப்பட்டுள்ளது. மாதாந்தம்	தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழுள்ள முறைமை மீளாய்வின் பொது விசேட கவனம் செலுத்தி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் உறுதியாக அடையாளம் காணப்பட வேண்டியதுடன் அதனுள் செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக

	இருந்த போதிலும் அமைச்சின் கீழ் அமுல்ப்படுதப்படுகின்ற செயற்திட்டங்களுக்காக நிதி ஏற்பாட்டினை வழங்கும் போதும் தீர்த்துவைக்கும் போதும் ஒப்பந்தங்களின் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ள கிரயம், செலுத்தப்படுகின்ற பெறுமதி, சான்றுபடுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதி மற்றும் நி.பி 94 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ஆகிய தகவல்ளை உள்ளடக்கிய பொழிப்பாக்கிய அறிக்கை கோரப்படாது கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக அமைச்சின் ஆவணங்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான புள்ளிவபரங்களை அடையாளங்காண முடியாதிருந்தது. நிதிக் கூற்றுக்களின் பின்னிணைப்பு (iv) இல் காட்டபடுகின்ற பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் - (i) உள்ளடக்கப்பட்ட புள்ளிவபரங்களின் ஒப்பீட்டு ரீதியான தகவல்களை அமைச்சின் ஆவணங்கள் மற்றும் ஏடுகளிலிருந்து அடையாளம் காண்பதற்கு முடியாதிருந்தது.	பெற்றுக்கொள்ளப்படுகின்ற செலவு அறிக்கை மற்றும் கட்டுநிதி வழங்குதலின் பிரகாரம் அமைச்சின் கணக்கு பிரிவின் மூலமும் செயற்திட்டம் தொடர்பான ஆவணங்கள் பாராமரிக்கப்படுவதுடன் நிதி ஏற்பாட்டு நிலைமையை பரீட்சித்துப் பார்த்து செயற்திட்டத்தினால் வேண்டிக்கொள்ளப்படுகின்ற கையிலுள்ள விலைப்பட்டியல்களுக்கு மாத்திரம் கட்டுநிதி விடுவிக்கப்படும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக தனியான பதிவேடடினை பேணுமாறு அனைத்து செயற்திட்டங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.	உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதி கூற்றுக்களில் உள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புககள் கூற்றில் ஒவ்வொரு செலவு விடயத்தின் கீழும் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் மொத்தம் காட்டப்பட வேண்டிய போதிலும் சில செலவு விடயங்களின் கீழான கடப்பாடுகளின் பெறுமதியை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாது பொறுப்புக்களின் பெறுமதி மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.	விலைப்பட்டியல்கள் தாமதித்து கிடைத்தல் மற்றும் பின்னர் அடையாளம் காணப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்படுவதன் காரணமாக இந்த வித்தியாசம் உருவாகியுள்ளது என அவதானிக்கப்பட்டது.	நிதிக்கூற்றுககளிலுள்ள அனைத்து கடப்பாடுகளும் பொறுப்புக்களும் தொடர்பாக முறைப்படியாக அறிக்கையிடுதல் வேண்டும்.

(iii)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நி.பி 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கடப்பாடுகள் கூற்று- பின்னிணைப்பு - (iv) இன் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 175,785.48 மில்லியனாகும். எவ்வாறாயினும் அமைச்சினால் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்கு மத்தியில் கணக்காய்வு தெரிவுப் பரீட்சிப்பின் பிரகாரம் 07 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பொறுப்புக்கள் ரூபா 41,372.69 மில்லியனாக இருந்ததுடன் அமைச்சினால் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் (பின்னிணைப்பு - (iv) இச்செயற்திட்டம் தொடர்பாக அடையாளங்காணப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ரூபா 17,646.35 மில்லியனாகும். அதற்கிணங்க 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 23,726.34 பொறுப்புக்கள் மீதி குறைத்து காட்டப்பட்டிருந்தது.	விலைப்பட்டியல்கள் தாமதித்து கிடைத்ததன் காரணமாக இந்த வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் அடுத்துவரும் ஆண்டுகளின் போது அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்தி இவவாறு இடம்பெறாமைக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.	-மேற்படி-
(iv)	அமைச்சு செயலாளரின் MOH&P/HWY/ACC/12 ஆம் இலக்க 2024 திசெம்பர் 23 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சின் அனைத்து செயற்திட்டங்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பது தொடர்பான தகவல்களை கோரவேண்டி இருந்தது. அதற்காக 24 செயற்திட்டங்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின்	விலைப்பட்டியல்கள் தாமதித்து கிடைத்ததன் காரணமாக இந்த வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் அடுத்துவரும் ஆண்டுகளின் போது அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்தி இவவாறு இடம்பெறாமைக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.	-மேற்படி-

	பின்னிணைப்பு - (iii) இல் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் பெறுமதி ரூபா 576.92 மில்லியனும் பின்னிணைப்பு - (iv) இல் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று (i) இல் பெறுமதி ரூபா 8,368.47 மில்லியனும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.		
(v)	செலவு விடயம் இலக்கம் 117-2-04-051-2506 வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கடப்பாடுகளின் நிதி இடைவெளியை தீர்த்துவைப்பதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு ரூபா 77,025 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்ப்படுத்தப்படுகின்ற விதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக உள்நாட்டு வங்கியிடமிருந்து அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களின் வட்டி மற்றும் தவணைப் பண கொடுப்பனவக்காக இவ்வாறு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நெடுஞ்சாலைகள் அமைச்சினால் மேற்கூறிய செலவு விடயங்களின் கீழ் கட்டுநிதி விடுவிக்கப்பட்டு ரூபா 77,024.22 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 0.82 மில்லியன் நிதி எற்பாடு மிகுதியாக இருந்ததுடன் அமைச்சினால் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 28,501.90 மில்லியன் கடப்பாடுகள் மற்றும்	வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் உள்நாட்டு வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்காக சனவரி 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய தவணைப் பணம் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஆண்டிற்கான அங்கீகரித்த நிதி ஏற்பாட்டின் கீழ் நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம் 2025 ஆம் ஆண்டில் அப்பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் தவறுதலாக நிதிக்கூற்றுக்களில் பின்னிணைப்பு (iv) இல் 94(2) இன் கீழ் உச்ச அளவு நிதி ஏற்பாட்டு எல்லை காட்டப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் அவ்வாறு செய்யாமல் இருப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதி ஏற்பாட்டினை மகைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை மேற்கொள்ளல் தவிர்த்துக் கொள்ள வேண்டியதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) ஆம் பிரிவின் கீழ் முறைமையை மீாய்வு செய்யும் போது விசேட கவனம் செலுத்தி பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் டுதொடர்பான உள்ளகக் கடப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(vi) 2020 இலிருந்து 2024 வரையான காலப்பகுதியில் 100,000 கிலோ மீற்றர் வீதி செயற்திட்டத்திற்காக ரூபா 215,981 மில்லியன் வருடாந்த பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அக்காலப்பகுதியில் 17,847 கிலோ மீற்றர் வீதிக்கான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு ஒப்பந்தகாரர்களுடன் ரூபா 394,508 மில்லியனைக் கொண்ட கடப்பாடு உருவாக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க பாராளுமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையினை மிகைத்து நி.பி 94 இல் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 178,527 மில்லியன் கடப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்ததுடன் நி.பி 127 இன் பிரகாரம் மதிப்பீடுகளின் நிதி ஏற்பாட்டு பணத்திற்கும் செலவுகளுக்குமிடையேயுள்ள குறிப்பிடத்தக்க அளவான வித்தியாசத்தினை அதிக அளவில் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்படுகின்றது என்பதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பானது நெடுஞ்சாலைகள் அமைச்சு செயலாளரினால் நிறைவேறறப்படாது முறையற்ற வகையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கடப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக உயர்ந்த வணிக வட்டி வீதத்தில் கடன் மற்றும் ரூபா 40,691.79 மில்லியன் திறைசேரி உண்டியல் 22.5 சதவீதம் மற்றும் 20 சதவீத வட்டி விகிதத்தின் கீழ் 04 ஆண்டில் வழங்கிய நிதி ஏற்பாட்டு எல்லையை மிகைத்து எந்த கொடுப்பனவும் செய்யப்படாததுடன் அவ்வாறே 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் மற்றும் 2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதங்களில் திறைசேரி பிணைமுறி வழங்கப்பட்டதானது 2021 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் கையிலுள்ள விலைப்பட்டியல்களை தீர்த்துவைப்பதற்காகவாகும். 2021 ஆம் ஆண்டில் மற்றும் 2022 ஆம் ஆண்டில் அரசாங்க திறைசேரியின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் அளவானது காணப்பட்ட பொருளாதாரம் பிரச்சினைகளின் காரணமாக கொடுப்பனவு செய்வதற்கு போதியதாக இல்லாததனால் 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் திறைசேரி உண்டியல்களை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லைகள் மற்றும் நிதிப்பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளை கருத்தில் கொள்ளாது கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை மேற்கொள்வது சம்பந்தமாக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஆண்டுகளில் முதிரச்சியடையும் வகையில் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி மற்றும் 2023 பெப்ரவரி 20 ஆந் திகதியகளில் வழங்கப்பட்டிருந்தது.

3.4 பிரதான உத்தியோகத்தர்களினால் செய்யப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான ஒரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான வெளிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	எதிர்வரும் காலங்களில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மீண்டும் மீளாய்வு செய்து அரசாங்க நிருவாக சுற்றறிக்கை, திறைசேரி சுற்றறிக்கை மற்றும் பல்வேறு வழிகாட்டிக் கோவைகளிலுள்ள ஏற்பாடுகளைப் போல கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் அறிக்கைகளின் மூலம் காட்டப்பட்டுள்ள அவதானிகப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் தொடர்பாக ஆய்வு செய்து உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீண்டும் மீளாய்வு செய்தலினை உங்களுக்கான பிரதியுடன் எழுத்துமூலம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கு இணங்க முறைமையினை மீளாய்வு செய்து 38(2) ஆம் பிரிவிற்கு இணங்க அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

அவதானிப்புக்கள்			பிரதான ணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	**பெறுமதி** **ரூபா மில்லியன்**	**இணக்கமின்மை**		
(i) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம்				
(1) 16(1),(2) மற்றும் 38(1)(ஈ) பிரிவுகள்	-	அமைச்சின் கீழ் செயற்பட்டிருந்த அரசாங்க கம்பனியான வரையறுத்த மகநெகும நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனியின் மற்றும் மகநெகும இமல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனியின் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளினதும் வரையறுத்த அதிவே வீதிக் கம்பனியின் 2016 இலிருந்து 2024 வரையான ஆண்டுகளினதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் 2025 மே 30 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை	கருத்துரை தரபபடவில்லை.	நிதிக் கூற்றுக்களை தயாரிக்காமையின் மூலம் ஏற்படக் கூடிய மோசடிகள், ஊழல்கள் மற்றும் பிழையான பயன்படுத்துதல்களை அடையாளம் காண்பதற்குத் தேவையான பரீட்சிப்புக்களை நடாத்தி பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

				ல.		
	(2)	38(1) (உ) பிரிவு	-	மீளாய்வாண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் சமர்ப்பிக்கப்படாத 08 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவற்றில் 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருந்தும் அவ்வாறு பதில் வழங்கும் போது கணக்காய்வு ஐயவினாக்களை அனுப்பி ஒரு மாதம் கடந்து 04 நாட்களிலிருந்து 94 நாட்கள் வரையான காலம் தாமதித்து பதில் வழங்கப்பட்டிருந்தது.	கருத்துரை தரப்படவில்லை.	அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உரிய காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	இலங்கை சானநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண கோவை					
	(1)	நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4)	-	(i) நெடுஞ்சாலைகள் அமைச்சின் NB - 1425 மற்றும் KW 5411 ஆம் இலக்க வாகனங்கள் முறையே 2024 பெப்ரவரி 02 மற்றும் 2024 மார்ச் 05	நிர்ணயிக்கப்பட்டவாறு அந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு அத்தியட்சகர் அலுவலகத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணத்திற்கு இணங்க சேதங்கள் தொடர்பான பரீட்சிப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுதல வேண்டும்.

		ஆந்திகதிகளில் விபத்திற்கு உள்ளாகியிருந்ததுடன் 2025 ஏப்ரல் 30 ஆந்திகதி வரையும் நிதிப்பிமாணங்களின் பிரகாரம் தொடக்க அறிக்கை மற்றும் முழுமையான அறிக்கை ஆகிய எந்த அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.		
6.15	(ii)	விபத்திற்கு உள்ளாகியிருந்த கிராமிய வீதிப் பிரிவின் CAU 0786 ஆம் இலக்க மோட்டார் வாகனம் அமைச்சினால் திருத்தம் செய்யப்பட்டிருந்தும் அச் செலவினை காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பரகாரம் தொடக்க அறிக்கை மற்றும்	செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தொடக்க அறிக்கையினை தயாரிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டதுடன் 2025-04-17 ஆந் திகதி தொடக்க அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையை கொண்டு முழுமையான அறிக்கையை தயாரித்து தேவையான மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-

		முழுமையான அறிக்கை ஆகிய எந்த அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		
(2)	நிதிப்பிரமாணம் 127 மற்றும் 128 -	100,000 கிலோ மீற்றர் வீதி நிகழச்சித்திட்டத்திற்காக அதுவரை தயாரிக்கப்பட்ட அனைத்து பொறியியல் மதிப்பீடுகளுக்கும திருத்தம் செய்வதற்கும் எதிர்காலத்தில் பொறியியல் மதிப்பீட்டினை திருத்தம் செய்தல் கட்டணத்தை பயன்படுத்தி தயாரிக்குமாறும் திருத்தம் செய்தல், கட்டணத்தை அடிப்படையாகக் கொண்டு கையொப்பமிடப்பட்டுள்ள அனைத்து ஒப்பந்தங்களுக்குமாக திருத்தத்தை அமுல்ப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கி அமைச்சு செயலாளரின் MOR&H/SEC/GEN/2021 ஆம் இலக்க 2021 ஏப்ரல் 27 ஆந் திகதிய கடிதம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படருந்தும் அடையாளங்காணப்பட்ட நடைமுறைச்	100,000 கிலோ மீற்றர் செய்றதிட்டத்தின் ஒப்பந்தங்களை வழங்கும் போது பொறியல் மதிப்பீட்டு பெறுமதிக்கு ரூபா 7200 மில்லியன் கழிவு வழங்கி ஒப்பந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இக்கழிவுப் பணமானது வேலைத் தளத்தின் நிலைமையை கருத்தில் கொண்டு ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்பட்டுள்ளது. அதனால் மதிப்பீட்டின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு ஒரு நட்டம் அல்லது சேதம் ஏற்பட்டிருக்கவில்லை.	ஒப்பந்த நிருவாகத்திற்குத் தேவையான திருத்தங்களை எழுத்து மூலம் வழங்குவதற்கும் அந்த ஏற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

			சாத்தியமற்ற நிலைமை தொடர்பாக முறையான ஒரு குழுவினை நியமித்து ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் ஒப்பந்த நிருவாகம் அனுபவங்களுக்கு இணங்க அடையாளம் காணப்பட்ட பிழைகளை சரிசெய்ய வேண்டிய முறைமையை பகுப்பாய்வு செய்து அதிலிருந்து உருவாகின்ற நிதிசார் மற்றும் தொழில்நுட்ப ரீதியான தாக்கங்கள் தொடர்பாக முறையான மதிப்பீட்டினை மேற்கொண்டு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிரந்தரமான ஒரு நடைமுறையினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து எழுத்துமூல அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டிய போதிலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(3)	நிதிப்பிரமாணம் 149	84.6 மற்றும் 14.65	நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படாத குடியரசின் ஏனைய	கருத்துரைகள் தரப்படவல்லை.	நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படாத அனைத்து

				அனைத்து வருமானங்களும் பெறுவனவுகளும் திரண்ட நிதியத்திற்கு செலுத்த வேண்டிய போதிலும் வரிசை அமைச்சிடமிருந்து பெற்ற நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி முடிவு செய்யப்பட்டிருந்த வாடிக்கையாளர செயற்பாடுகளுக்காக அறவீடு செய்யப்பட்ட ரூபா 84.8 மில்லியன் வாடிக்கையாளர் வைப்பு மற்றும் வாடிக்கையாளர் செயற்பாடுகளை இடையில் நிறுத்தியதன் காரணமாக உரிய ஒப்பந்தககாரர்களிடமிருந்து அறவீடு செய்ய்ப்பபட்ட ரூபா 14.65 மில்லியன் செயலாற்றல் பிணை முறிப் பெறுமதி வரிசை அமைச்சிற்கு செலவுவைப்பதற்கு பதிலாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வருமானமாக காட்டப்பட்டிருந்தது.		பெறுவனவுகளும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமையின மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தி வருமானப் பெறுவனவுகளை சரியாக கணக்கீடு செய்தல் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	பெறுகை வழிகாட்டிக் கோவை					
	(1)	5.4.4. ஆம் பிரிவு	-	ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணங்கள் செலுத்தும் பிணையை சமர்ப்பிப்பதன் அடிப்படையில் ஒப்பந்த பணத்தில் உச்ச அளவாக 20	2020 திசெம்பர் 21 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் கம்பனிக்கு முற்பணம்	வங்கிப் பிணைகள் சம்பந்தமான பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக

			சதவீதமான முற்பணம் செலுத்தலாம் என்ற போதிலும் அதற்கு இணக்கமற்று மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனியின் முழுமையான 1,753 வேலைக் கட்டளைகளில் 1,678 வேலைக் கட்டளைகளுக்காக வங்கிப் பிணைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	வழங்கும் போது வங்கிப் பிணை சமர்ப்பிக்கும் தேவைப்பாட்டிலிருந்து விடுவிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.	தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு மற்றும் ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேணடும்.
(2)	5.4.8 ஆம் பிரிவு	125,730	மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 05 சதவீதமான செயலாற்றல் பிணை முறி கம்பனியால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனியின் 1,753 வேலைக் கட்டளைகளில் 1,608 வேலைக் கட்டளைகளுக்காக செயலாற்றல் பிணை முறி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இக்கம்பனி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட ஒரு நிறுவனம் என்பதனால் செயலாற்றல் பிணை முறியினைப் பெற்றுக்கொள்ளுதல் இடமபெறவில்லை.	செயலாற்றல் பிணை முறி சம்பந்தமான பொறுப்பினை நிறைவேற்றத் தவறியுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iv)	2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	5.85	மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5.85 மில்லியனான 05 வாகனங்கள் மற்றும் இதுவரை மதிப்பீடு செய்யப்படாத ஒரு வாகனத்தை உள்ளடக்கி 06 வாகனங்கள் இலங்கை போக்குவரத்து சபையினால் பயன்படுத்தப்பட்டிருந்தும் இன்றுவரை அந்த வாகனங்களின் மதிப்பீட்டு பெறுமதியை போக்குவரத்து அமைச்சிடமிருந்து பெற்று வாகனங்களை முறைப்படியாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஏனைய 07 நிறுவனங்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த 04 ஜீப்கள் 04 கெப் வாகனங்கள், ஒரு கார் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு முறைப்படியாக ஒப்படைப்பதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சபைக்கு வழங்கப்பட்டுள்ள 06 வாகனங்களில் இரண்டு வாகனங்கள் இந்த அமைச்சின் தைவிர்ப்பிற்கு உத்தேசிக்கப்பட்டு வாகனப் பதிவேட்டிற்கு உள்டக்கி கைதவிர்ப்புச் செய்வதற்காக மீண்டும் அமைச்சிற்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை போக்குவரத்து சபையிடமிருந்து மிகுதி 04 வாகனங்களில் முழுமையான மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 4.6 மில்லியன் பணம் அமைச்சிற்குச் செலுத்தபபட்டுள்ளது.	பயன்படுத்தும் உரிமை ஒப்படைக்கப்பட்டுள்ள வாகனங்களின் சட்டரீதியான உரிமையை ஒப்படைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க	-	ஒவ்வொரு எரிபொருள் பரீட்சிப்பிற்குப் பின்பு 12 மாத காலப்பகுதிக்குப் பின்னர் அல்லது	இணங்கி கொள்கிறேன். நெடுஞ்சாலைகள் பிரிவின் வாகன குளாமில் காணப்படுகின்ற	எரிபொருள் நுகர்வு தொடர்பான பரீட்சிப்புக்களை சுற்றறிக்கை ஏற்பாடுகளின்

	நிருவாக சுற்றிக்கையின் 3.1 ஆம் பிரிவு	25,000 கிலோ மீற்றர் துூரம் ஓடியதன் பின்னர் அல்லது இன்ஜின் சம்பந்மான பிரதான திருத்தங்கள் செய்ததன் பின்னர் ஆகிய விடயங்களுக்கு மத்தியில் முதலில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திற்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் வாகனப் பிரிவில் உள்ள 21 வாகனங்கள் 2018 ஆம் ஆண்டிலிருந்தும் நெடுஞ்சாலைகள் பிரிவின் 38 வாகனங்கள் மீளாய்வாணடிலும் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை.	வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வினைப் பரீட்சித்தல் 2025 ஆம் ஆண்டு தொடர்பாக மேற்கொள்வதற்கு ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது .	பிரகாரம் உரிய காலத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
(vi)	2018 பெப்ரவரி - 15 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க வணிக மற்றும் முதலீட்டு கொள்கை சுற்றறிக்கையின் 8.3 மற்றும் 9.2 ஆம் பிரிவுகள்	தகமை பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் நிவாரண அடிப்படையில் வரி விடுவிப்பு மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். எனினும் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 11.7 ஆம் பிரிவின் பிரகாரம் கல்வித் தகமைகளை	கணக்காய்வு ஐய வினாவில் உரிய அதிகாரி தொடர்பாக குறிப்பிட்டிருக்காதனால் பதில் வழங்க முடியாதுள்ளது.	பொறுப்பினை நிறைவேற்றத் தவறியுள்ள உத்தியோகத்தர் சம்பந்தமாக தாபன விதிக் ோகவையின் II ஆம் பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் விசாரணைகளை நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		உறுதிப்படுத்தாது RAH/A/MOH/2024/ C/A.Q./06 ஆம் இலக்க 2025 மார்ச் 19 ஆந் திகதிய கணக்காய்வு ஐய வினாவில் காட்டப்பட்டவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சேவை நிரந்தரமாக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தருக்கு மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்து.		
(vii)	2003 யூன் 02 - ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவு	ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அங்கீகரித்த ஆளணினருடன் தாபன வரைபடம் இருக்க வேண்டியதுடன் அந்த தாபன வரைபடம் மற்றும் அங்கீகரித்த ஆளணியினர் பொதுத்திறைசேரியின் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபரண (தனியார்) கம்பனியால் 2022 ஆம் ஆண்டின் போது 912 நபர்கள் வேலையில் ஈடுபட்டிருந்ததுடன் அவர்களில் 24 நபர்கள் உயர் முகாமைத்துவதிலுள்ள உத்தியோகத்தர்கள்	கருத்துரை தரப்படவில்லை.	அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் ஆளணியினர் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையினை அங்கீகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை தாமதமின்றி மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆனதுடன் ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக திறைசேரியின் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க பொதுத்திறைசேரியின் அங்கீகாரமில்லாது சம்பளமும் கூலிகளும் செலுத்தப்பட்டிருந்தது.

3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் ‘‘ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட நவீன வீதி வலையமைப்பினை இலங்கையில் அமுல்படுத்துதல்’’ என்ற தலைப்பில் 2019 நவம்பர் 25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் ‘‘அனைத்து செயற்திட்ட பிரேரணைகளும் முறையான சாத்தியவள ஆய்வு அறிக்கையுடன் மதிப்பீடு செய்தல் மற்றும் சிபாரிசு செயவதற்காக தேசிய பெறுகைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்	வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் மேற்கூறிய நிகழ்சித்திட்டத்தினை அமுல்படுத்தும் நடைமுறைக்காக 20/0142/221/005 ஆம் இலக்க 2020-01-14 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்காக 2020-02-05 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கிணங்க 100,000 கிலோ மீற்றர் செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டதுடன் ஐந்து ஆண்டுகள்	அமைச்சரவையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றாது செயற்திட்டங்களை அமுல்படுத்தியதன் மூலம் ஏற்பட்டுள்ள நட்டத்தை அடையாளம் காணல் மற்றும் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	எனக் காட்டப்பட்டிருந்தது.'' அந்த அவதானிப்பிற்கு உட்பட்டு அதற்காக கொள்கை ரீதியான அங்கீகாரத்தினை வழங்குவதற்கு 2019 திசெம்பர் 18 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாது 2020 - 2022 காலப்பகுதிக்குள் 17,847 கி.மீற்றர் துாரத்தைக் கொண்ட 13,160 வீதிகளுக்கு ரூபா 394,508.09 மில்லியனான மதிப்பீடு நிதிப்பிரமாணம் 136, 137, 138 மற்றும் 139 இன் கீழ் பொறுப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தாது அங்கீகரிக்கப்பட்டு அமைச்சரவை கொள்கை தீர்மானத்திற்கு முரணாக ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2024 செப்தெம்பர 30 ஆந் திகதியில் உள்ளவாறு வீதி அபிவிருத்தி ஒப்பந்தத்திற்காக ரூபா 190,516.15 மில்லியன் செலவு செய்வதற்கு அமைச்சு செயலாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருந்தது.	காலப்பகுதியின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டு 2020 -2022 காலப்பகுதிக்குள் 17,847 கிலோ மீற்றர்களைக் கொண்ட 13,160 வீதிகள் மற்றும் ரூபா 394.5 மில்லியன பெறுமதியான ஒப்பந்தங்கள் வழங்குதல் இடம்பெற்றது. அங்கீகரித்த வருடாந்த பாதீட்டு எல்லைக்கு உட்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையும் ரூபா 178,975.93 செலவு செய்யப்பட்டுள்ளது.	
(ஆ)	100,000 கி.மீற்றர் வீதியில் மாற்று வீதிகள், உப வீதிகள் கிராமிய வீதிகள் என்பவற்றை புனரமைத்தல் மற்றும் அமுல்ப்படுத்துதல் என்ற தலைப்பில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 2023 திசெம்பர் 11 ஆந் திகதிய 23/2542/608/010-1 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் 4.0 ஆம் பந்தியின் 4.1 ஆம் உப பந்தியில் குறிப்பிட்டவாறு அதிகாரசபைக்கு உரியதல்லாத வீதிகளை நிர்மாணிக்காதிருத்தல் வேண்டும் என்ற சிபாரிசு 2024-01-08 ஆந் திகதி நடைபெற்ற	போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளரினால் (பொறியியலாளர்) 2024-07-29 ஆந் திகதி பணிப்பாளர் நாயகம், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அமைச்சின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட வீதிகள் மாத்திரமே வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டன.	-மேற்படி-

	அமைச்சரவை கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த கொள்கை ரீதியான அங்கீகாரத்திற்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2024 ஆம் ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகளிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரியதல்லாத 28 வீதிகளுக்காக ரூபா 562.48 மில்லியன் பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. மேலும் உரிய ஒப்பந்த செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.		
(இ)	**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் கம்பனிகளை ஸ்தாபித்தலும் கலைத்தலும்**		
(i)	வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஒரு கம்பனியாக செயற்பட்ட வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தனியார் கம்பனியை (RC & DC) முழுமையாக மூடுவதற்கும் ஒரு தனியார் பொது கம்பனியை தோற்றுவிக்கும் இயலுமை தொடர்பாக அமைச்சு மற்றும் திறைசேரியினால் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் 2024 சனவரி 21 ஆந் திகதி நடைபெற்ற அமைப/04/0053/104/004 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அதற்கு முரணாக நிர்மாணக்	கருத்துரை தரப்படவில்ரலை.	அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்கியிருக்காமைக்கு காரணமான விடங்கள் தொடர்பாக முறையாக பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுத்த கம்பனிகள் சம்பந்தமாக முறையாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	கைத்தொழில் சங்கம் ஒப்பந்தக்காரர்களின் தேசிய சங்கத்துடன் பங்குடையையை உருவாக்கி கம்பனியை தோற்றுவிப்பதற்காக 2004 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 04/0848/004/013-1 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அந்த அமைச்சரவை அங்கீகாரத்திற்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 795/2004 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 2004 யூன் 10 ஆந் திகதி மகநெகும இமல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனியும் 2004 யூன் 11 ஆந் திகதி மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனியும் தோற்றுவிக்கப்பட்டிருந்தும் இது சம்பந்தமாக அமைச்சினால் கண்காணிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.		
(ii)	கம்பனியின் பெரும்பாண்மையான உரிமையை திறைசேரிக்கு ஒப்படைக்கும் வகையில் மிகுதிப் பங்குகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கிடைக்குமாறு கம்பனியின் அமைப்பு புறவிதியினை திருத்தம் செய்வதற்கு 2013	கருத்துரை தரப்படவில்லை.	-மேற்படி-

	பெப்ரவரி 18 ஆந் திகதிய 13/0134/505/004 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அந்த அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க மகநெகும இமல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனியின் மற்றும் மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனியினதும் அமைப்பு புறவிதியில் திருத்தம் செய்யப்பட்டிருந்தும் அமைச்சரவை தீர்மானங்களுக்கு இணங்கியிருக்காமை சம்பந்தமாக அமைச்சினால் பின்தொடர் நடவடிக்கை எடுத்து பொருத்தமான தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(iii)	மகநெகும இமல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனியின் மூலதன பங்களிப்பாக 2004 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற்ற ரூபா 01 மில்லியனுக்காக எந்த பங்கும் இன்று வரை கம்பனியால் வழங்கப்பட்டிருக்கவில்லை. கம்பனியின் பங்கு மூலதன பங்களிப்பானது வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பீ.ஆர்.பெரேரா என்ற நபருக்கு ரூபா 100 வீதமான 02 பங்குகளாக பேணப்பட்டு வந்திருந்தும் அந்த தனிப்பட்ட நபர் மற்றும் வீதி அபிவிருத்தி	கருத்துரை தரப்படவில்லை.	கம்பனி சம்பந்தமாக அதிகாரசபைக்கு உள்ள உரிமையினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		அதிகாரசபையினால் அப்பங்குகளுக்காக பணம் செலுத்தப்படாதிருந்தும் அக்கொடுக்கல் வாங்கலினை சரிசெய்வதற்கு அமைச்சின் கண்காணிப்பிற்கு உட்ப்ட்டிருக்கவில்லை.		
	(iv)	மகநெகும வீதி நிர்மாணங்கள் இயந்திர உபகரண (தனியார்) கம்பனி உள்ளடங்கலாக மூன்று கம்பனிகளை ஒருங்கிணைத்து ஒரு கம்பனியை தோற்றுவிப்பதற்கு 2023 மார்ச் 28 அந் திகதிய 23/0394/608/033 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அந்த நடவடிக்கை தற்பொழுது பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் அமைச்சரவை தீர்மானங்களுக்கு இணங்கியிருக்காமை சம்பந்தமாக அமைச்சின் கண்காணிப்பிற்கு உட்ப்ட்டிருககவில்லை.	கருத்துரை தரப்படவில்லை.	அமைச்சரவையின் கொள்கை மற்றும் தீர்மானத்தினை முறைப்படியாக அமுல்ப்படுத்துதல் வேண்டும். பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நீண்டகால தாமதம் ஏற்படுகையில் அமைச்சரவைக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)		வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 100,000 கிலோ மிற்றர் வீதிச் செய்றத்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 193,518 மில்லியன் பெறுமதியான 2,481 வேலை கட்டளைகள் மகநெகும வீதி நிர்மாணங்கள் மற்றும் இயந்திர உபகரண தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிந்தது. அதில் ரூபா 32,736 பெறுமதியான 351 வேலைக் கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 29,130 மில்லியன் பெறுமதியான 306 வேலைக் கட்டளைகளின்	கருத:துரை தரப்படவில்லை.	சேவை வழங்குனர்களைத் தெரிவு செய்யும் போது பெறுகை நடைமுறைகளை பின்பற்றாமை சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ள உத்தியோகத்தர்களை

நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 5,920 மில்லியன் பெறுமதியான 71 வேலைக் கட்டளைகளின் ஒப்பந்த வேலைகளை நேரடியாக மேற்கொள்வதற்காக கம்பனியால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் அது முழு வேலைக் கட்டளைகளில் 03 சதவீதம் அளவுடையதாகும். 2008 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக முழுக் கட்டளைகளின் பெறுமதியில் 97 சதவீதம் அதாவது ரூபா 125,730 மில்லியன் பெறுமதியான 1,753 வேலைக் கட்டளைகளுக்காக உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தும் இந்த நடவடிக்கை சம்பந்தமாக அமைச்சினால் கண்காணிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.		அடையாளங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தி ஒப்பந்தம் மற்றும் உப ஒப்பந்தம் வழங்குவது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு எழுத்துமூலம் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.

3.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் “பீ” கணக்கு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2013 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமைச்சு, திணைக்களம் மற்றும் மாகாண சபை நிறுவனங்களுக்கிடையே இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்கள், மரணமடைந்த, ஓய்வுபெற்ற, வேலையிலிருந்து இடை நிறுத்திவைக்கப்பட்ட மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற 09 உத்தியோகத்தர்களிடமிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 1.52 மில்லியன் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.	09 ஊழியர்களின் தீர்த்துதுவைக்கப்படாத மீதி ரூபா 1.52 மில்லியனாகும்.	உரிய கடன் மீதியை பிணையாளர்களிடமிருந்து அல்லது தாமதத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பொறுப்பை நிறைவேற்றத் தவறியுள்ள உத்தியோகத்ரத்கள் சம்பந்தமாக தாபன விதிக் ரோகவையின் II ஆம் பகுதியின் XLVII ஆம்

		அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் விசாரணைகள் நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.8 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டம் - முதலாவது பெக்கேஜ் கொட்டாவையிலிருந்து தொடங்கொட வரை கொட்டாவையிலிருந்து தொடங்கொட வரையான தெற்கு அதிவேக வீதியின் முதலாவது பெக்கேஜ் இற்கான ஒப்பந்தம் 2005 செப்தெம்பர் 08 ஆந் திகதி China Harbour Engineering Company (Group) இற்கு ரூபா 9,585.87 மில்லியன் தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் தொடக்க ஒப்பந்த காலம் 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதி முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.		
(i) ஒப்பந்த நடவடிக்கைகளுக்கு இடையே ஒட்டுமொத்த வீதியினையும் 04 நிரல்களாக அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானித்ததன் காரணமாக ஒப்பந்த பெறுமதி ரூபா 20,000 மில்லியனாக 2009 செப்தெம்பர் மாதம் திருத்தப்பட்டிருந்தது.	கருத்துரை தரப்படவில்லை.	ஒப்பந்த நோக்கெல்லையை மாற்றுதல், பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு முரணாக மேற்கொள்வது சம்பந்தமாக பொறுப்பை நிறைவேற்றத் தவறியுள்ள உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக்

	செயற்திட்டத்தினை திட்டமிடுவதிலுள்ள பலவீனத்தின் காரணமாக ஆரம்ப கட்டத்திலேயே நோக்கெல்லையை உறுதியாக அடையாளம் காணாமையால் ஒப்பந்தக்காரர்களை தெரிவுசெய்யும் முறையான பெறுகை நடைமுறையினைப் பின்பற்றுதலின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த பொருளாதார நலன்கள் இழக்கப்பட்டிருந்தது.		கோவையின் II ஆம் பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் பரீட்சிப்புக்களை நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	காலத்தை நீடிப்புச் செய்தல் (EOT) மற்றும் ஒப்பந்த நோக்கெல்லையில் சில மாற்றங்களின் பின்னர் 2011 நவம்பர் 23 ஆந் திகதி பூர்த்தி செய்தல் சான்றிதழ் (Certificate of Substantial Completion) வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரினால் அவரின் பூர்த்திசெய்தல் கூற்றில் (Statement at Completion) ரூபா 15,221.24 மில்லியனான விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட செயற்திட்ட குழு வழங்கிய சிபாரிசாகிய இறுதி விலைப்பட்டியலின் பெறுமதியான ரூபா 4,646.23 மில்லியன் பெறுமதிக்கு இணங்கி கொள்ளப்படுகின்றது என 2023 ஒக்தோபர் 24 ஆந் திகதி ஒப்பந்தக்காரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2023 செப்தெம்பர் 20 ஆந் திகதி நியமித்த நிலையான தொழில்நுட்ப	கருத்துரை தரப்படவில்லை.	விலைப்பட்டியலின் பெறுமதி தொடர்பாக பரீட்சித்ததன் பின்னர் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யும் பொறுப்பினை தீர்மானிக்க வேண்டியதுடன் ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(எ) பிரிவின் பிரகாரம் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்தல் வேண்டும்.

	மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுக்கு இணங்க கொடுப்பனவு பெறுமதி ரூபா 7,912.06 மில்லியனாக ரூபா 3,265.81 மில்லியனால் அதிகரித்திருந்தது. செயற்திட்டம் மற்றும் பெறுகைக்குழு இக்கொடுப்பனவுக்கு சிபாரிசு செய்தலின் செல்லுபடித் தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தி இருக்கவில்லை.		
(iii)	அமைச்சினால் 2024 யூலை 30 ஆந் திகதி சமரப்பித்த 31/2024 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2024 யூலை 30 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் நிரந்தர தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுக்கு இணங்க ஒப்பந்தக்காரருக்கு செலுத்துவதற்கு சிபாரிசு செய்யப்பட்ட ரூபா 7,912.06 மில்லியன் பெறுமதியை கொடுப்பனவு செய்வதற்காக முழு செயற்திட்ட கிரயத்தினை ரூபா 21,978.07 மில்லியனிலிருந்து ரூபா 29,890.13 மில்லியன் வரை முறையான நடைமுறையினைப் பின்பற்றி திருத்தம் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அதற்கு முரணாக கொடுப்பனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் குறைநிரப்பு மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	கருத:துரை தரப்படவில்லை.	கொடுப்பனவு தொடர்பாக பரீட்சித்ததன் பின்னர் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யும் பொறுப்பினை தீர்மானிக்க வேண்டியதுடன் ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(எ) பிரிவின் பிரகாரம் சட்டத்தை அமுல்ப்படுத்தும் நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்தல் வேண்டும்.

(iv)	ஒப்பந்தக்காரரின் நிலையான கொடுப்பனவுகளை புலனாய்வு செய்வதற்காக நியமித்த குழுவின் 2024 திசெம்பர் மாதம் வழங்கிய அறிக்கையின் பிரகாரம் மேலதிக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு 2024 செப்தெம்பர் 06 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் கையொப்பமிட்ட தீர்த்துவைத்தல் உடன்படிக்கையானது உரிய நடைமுறையினை மீறுதல் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறுதல் என தீர்மானிக்கப்பட்டிருந்தது.	கருத்துரைகள் தரப்படவில்லை.	உரிய நடைமுறையினை மீறி பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	நிரந்தர பெறுகைக் குழுவின் அவதானிப்புக்களின் பிரகாரம் இது தொடர்பாகக் காணப்பட்ட தகவல்கள் வரையறுக்கப்பட்டது என காட்டப்பட்டிருந்தது. இவ்வாறான பொறுப்புக்களை தீர்த்துவைக்கும் வரை ஆவணங்களை பாதுகாப்பதற்கு முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கருத்துரை தரப்படவில்லை.	பொறுப்புக்களை தீர்த்துவைக்கும் வரை ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு முறையாக நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ள உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனி

கம்பனியினால் ஒரு வழங்குனருக்கு வீதி நிர்மாண செயற்திட்டம் தொடர்பான	கருத்துரை தரப்படவில்லை.	காசோலையின் பெறுமதி தொடர்பாக பரீட்சிப்புக்கள்

கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட ரூபா 464,348.79 இற்கான 089989 ஆம் இலக்க காசோலைக்காக மக்கள் வங்கியின் கட்டுபெத்த கிளையில் பேணப்பட்டு வந்த 313-1-001-7-3657044 ஆம் இலக்க நடைமுறைக கணக்கிற்கு ரூபா 21,846,432.10 வங்கியினால் வரவு வைக்கப்பட்டிருந்தது. இந்த அதிகாரசபையின் உள்ளக கணககாய்வாளர் தொடக்க புலனாய்வினை மேற்கொண்டிருந்ததுடன் அப்புலனாய்வின் அறிக்கைக்கு இணங்க காசோலையின் பெறுமதி மோசடியான முறையில் மாற்றம் செய்யப்பட்ட நிதி முறைகேடுகள் இடம்பெற்றிருந்தது எனவும் கம்பனயின் தலைவர், பொது முகாமையாளர், நிதி உத்தியோகத்தர் மற்றும் நிதிப்பிரிவில் சேவையாற்றுகின்ற் உத்தியோகத்தர்கள் இந்த நிதி முறைகேடுகள் மேற்கொள்வதற்கு தொடர்பட்டிருந்தமை தொடர்பான ஐயப்பாட்டினை மறுக்க முடியாது எனவும் குறிப்பிடப்பட்டது. மேற்கூறிய நிதி மோசடி சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிதி மோசடிகளின் மூலம் பிழையாகச் செலுத்தப்பட்ட ரூபா 21,382,083.31 பெறுமதியை அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அமைச்சினால் இது சம்பந்தமாக கண்காணிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) களணிவெலி புகையிரத வீதி பாதுகாப்பு பகுதியில் அனுமதியின்றி குடியிழிருப்பவர்களை இழப்பீடு செலுத்துவதன் மூலம் மீளமைத்தல் செயற்திட்டத்தின்

மேற்கொண்டு தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்ரத்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஏ) பிரிவின் பிரகாரம் சட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கான முகவர் நிறுவனங்களுக்கு முறைப்பாடு செய்தல் வேண்டும்.

கீழ் இழப்பீட்டுப் பணத்தை செலுத்தி மீளமைக்கப்பட்ட 66 வீடுகளுக்கு மத்தியில் 20 வீடுகள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுப் பரீட்சிப்பின் போது இழப்பீடு செலுத்தி மீளமைக்கப்பட்ட முறையே 1.24 மில்லியன் மற்றும் ரூபா 1.23 மில்லியனாக மொத்தமாக ரூபா 2.47 மில்லியன் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i)	2015 ஆம் ஆண்டின் பின்னர் வாக்காளர் இடாப்பின் பிரகாரம் குடியிருப்பதனை உறுதிப்படுத்தாது 2017 ஆம் ஆண்டின் போது புகையிரத பாதுகாப்பு பிரதேசத்தில் குடியிருப்பவர்கள் தொடர்பான சமூக மீளாய்வின் போது வீட்டு நிர்மாணமாக அடையாளம் காணப்பட்ட ஒரு வீட்டில் தைத்த ஆடைகள் விற்பனை செய்யும் ஒரு நிறுவனம் உள்ளது எனக் குறிப்பிட்டு ஒரு நபரினால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தலினை அடிப்படையாகக் கொண்ட உறுதிப்படுத்தல் பரீட்சிப்பின் போது இந்த வீட்டில் வசிப்பதாகக் குறிப்பிட்ட நபர் அந்த வீட்டில் வசித்திருக்கவில்லை எனவும் அவர் இதற்கு அருகாமையில் இருக்கும் இரண்டு மாடி வீட்டில் நிரந்தரமாக குடியிருப்பவர் எனவும் ஆவணங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டிருந்தும் அந்த வீட்டின் அரசாங்க மதிப்பீடான ரூபா 1.24 மில்லியன் இழப்பீட்டு பணம் முன்வந்திருந்த நபருக்கு 2023 ஆம்	2019-06-04 ஆந் திகதி மேற்கொண்ட பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டதானது தொடக்க மீளாய்வில் தகவல்களை வழங்கியுள்ளதற்கு இணங்க குடியிருப்பாளர் உள்ளடங்கலாக குடும்ப அங்கத்தவர்கள் இந்த இடத்தில் குடியிருக்கவில்லை என்பதுவும் நிரந்தர வதிவிடம் புகையிரத பாதுகாப்பு பிரதேசத்திற்கு வெளியே ஒரு தனியார் காணியில் இலக்கம் 30/41 எனும் விலாசத்தில் உள்ளது என்பதுவும் ஆகும். வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்களைப் பரீட்சிக்கும் போது இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது டன் புகையிரத பாதுகாப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள நிர்மாணங்கள் அவரினால' நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்துதல் மாத்திரம் செய்யப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. '	பிழையான கொடுப்பனவுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது		
(ii)	புகையிரத திணைக்களத்தின் காணியில் குடியிருக்காத மின்சாரம் அல்லது நீரினைப் பெற்றுக்கொள்ளாத சிறிய நிர்மாணங்கள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சமூக மீளாய்வின் போது அது பற்றி உறுதிப்படுத்தப்பட்டிருந்தது . எனினும் முறையான குத்தகைக்கு ஒப்படைத்தலின் மூலம் குத்தகை உரிமையை உறுதிப்படுத்தாத மற்றும் முறையாக குத்தகை கொடுப்பனவு மேற்கொள்ளாத வாக்காளர் இடாப்பின் பிரகாரம் அந்த நிரந்த குடியிருப்பு உறுதிப்படுத்தப்படாத அதற்கு அருகாமையில் நிரந்தர குடியிருப்பின் அந்த நிர்மாணத்தின் உரிமையாளராக காணப்படுகின்ற ஒரு நபருக்கு 2023 யூன் 09 ஆந திகதி கோரிக்கை மதிப்பீட்டு குழு அறிக்கையின் பிரகாரம் ரூபா 1.23 மில்லியன் இழப்பீடாகச் செலுத்தப்பட்டிருந்தது.	தகவல்களை உறுதிப்படுத்தும் மீளாய்வு 2023-04-05 திகதி மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் குடியிருப்பாளர் அந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்த நிர்மாணத்தை பயன்படுத்தியிருந்தும் அதில் தங்கியிருந்து குடியிருக்கின்றமை அடையாளம் காணப்படவில்லை. மேலும் தொடக்க மீளாய்வு சந்தர்ப்பத்தின் போது அவர் அது வரை புகையிரத பாதுகாப்பு பிரதேசத்தில் குத்தகை அடிப்படையில் குடியிருக்கின்றார் என கூறியிருந்தும் அதுவும் பிழையான வெளிப்படுத்தலாகும்.	-மேற்படி-
(ஈ)	**துறைமுக நுழைவு மேம்பால வீதி செயற்திட்டம்**		
(i)	செயற்திட்ட உடன்படிக்கையின் விசேட நிபந்தனை ஏ பகுதியின் கீழ் நிபந்தனை இலக்கம் 14.5 இன் பிரகாரம் களஞ்சியத்திலுள்ள பொருட்களுக்காக 08 கொடுப்பனவு விடயங்கள்	பொறியியல் ஆலோசகரின் கணிப்பீட்டிற்கு இணங்க 2024 நவம்பர் இறுதியளவில் 903 தொன் பலப்படுத்தல் பொருட்கள் (reinforcement) மிகுதியாக இருந்தது. இந்த அளவில் 336	அனைத்து உப கொடுப்பனவு சான்றிதழ்களும் ஒப்பந்த நிபந்தனைகளுக்கு இணக்கமானது என செயற்திட்ட பணிப்பாளர்

அடையாளங்காணப்பட்டிருந்ததுடன் 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை 37 உள்ளக விலைப்பட்டியல்களின் பிரகாரம் களஞ்சியப்படுத்தப்பட்ட பொருட்களுக்காக ரூபா 3,986.68 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2024 நவம்பர் 30 ஆந் திகதி வரை செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 98 சதவீதமாக இருந்ததுடன் 05 பலப்படுத்தல் (Reinforcement) பொருட்கள் அது வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் மிகுதியாக உள்ள 02 சதவீதமான வேலைகளுக்காக 1,230 தொன் பலப்படுத்தல் பொருட்கள் காணப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 547.35 மில்லியனாகும். மேலும் அந்த இருப்பின் மிகுதி மேவலகளுக்கு தேவைப்பாடாத 503 தொன் பலப்படுத்தல் பொருட்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2024 ஏப்ரல் மாதத்திலிருந்து ஒப்பந்தக்காரருக்கு தேவைப்படாத பொருட்களுக்காக ரூபா 179.07 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அதன் மூலம் ஒப்பந்தக்காரர் முறையற்ற வகையில் நிதி நலன்களைப் பெற்றுக்கொண்டிருந்தார். உள்ளக விலைப்பட்டியல்களை சிபாரிசு செய்யும் போது ஆலோசனை நிறுவனம்

தொன்கள் வேலைகளின் தொடக்க நோக்கெல்லையின் மிகுதி வேலைகளுக்காக ஒப்பந்தக்காரரினால் 567 தொன் மிகுதியான அளவு இடத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் அது சாய்வுப் பாதை 03 மற்றும் சாய்வுப் பாதை 04 இனை இணைக்கும் வீதிகள் மற்றும் அது சார்ந்த கட்டமைப்பிற்காக VO-60 இன் கீழ் ஈடுபடுத்தப்படுகின்றது எனவும் பொறியியல் ஆலோசனைக் கம்பனி உறுதிப்படுத்தியுள்ளது.

சாய்வுப் பாதை 03 மற்றும் சாய்வுப் பாதை 04 இனை இணைக்கும் வீதி மற்றும் அது சார்ந்த கட்டமைப்பிற்காக முரண் கட்டளை வழங்கும் தேவைப்பாடு 2024 யூன் மாதத்திற்கு முன்னர் அடையாளம் காணப்பட்டது. முரண்களுக்காக அங்கீகரிக்கும் நடைமுறை இடம்பெற்றுவருவதுடன் வேலைகளின் அவசரதன்மை மற்றும் புதிய வேலை நடவடிக்கைகள் முடிவடையும் வரை மிகுதிப் பொருட்களை வைத்திருக்கும் தேவைப்பாட்டினால் பலப்படுத்தும் அளவினை Material at site ஆக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

உறுதிப்படுத்த வேண்டியதுடன் ஒப்பந்தக்காரர்களுக்கு முறையற்ற பணப்பிரதிபலன் கிடைப்பதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இது தொடர்பாக விசாரணைகள் நடாத்தி வேலைத்த தளத்திலுள்ள மிகுதியான மூலப் பொருட்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது தொழில் தருனரின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	தமது பொறுப்பினை நிறைவேற்றாமையின் காரணத்தினால் மேற்கூறிய கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2024 ஆம் ஆண்டிற்கான ஆலோசனை சேவைக்காக செலுத்திய ரூபா 2,452.77 மில்லியன் பணம் வினைத்திறனற்றது என அவதானிக்கப்பட்டது.		
(ii)	ஒப்பந்தக்காரரினால் 363 இரும்பு தூண் தொகுதிகள் (மின்விளக்கு தூண்கள்) இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. வேலைத் தளத்தில் மிகுதியாக உள்ள பொருட்களாக அவறறிற்காக 53 உப கொடுப்பனவுகளின் கீழ் ரூபா 14.69 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பொருட்கள் இன்றுவரை ஒப்பந்தம் வழங்கப்படாதுள்ள பிரதான வீதிக்கு உள்ள குறுகிய ரேம்ப் 03 மற்றும் 04 இற்காக மதிப்பீடு செய்த பொருட்கள் என வெளிப்படுத்தப்பட்டது.	செயற்திட்டத்தின் தொடக்க நோக்கெல்லையின் பயன்பாட்டிற்காக ஒப்பந்தக்காரினால் 363 மின்விளக்கு தூண்கள் இறக்குமதி செய்யப்பட்டன. தொடக்க நோக்கெல்லைக்கு 03 சாய்வுப் பாதைகளின் குறிப்பிடத்தக்க அளவான நீளம் (முழு நீளத்தில் 70% அளவு) உள்ளடங்கியுள்ளது.	-மேற்படி-

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் அதிகாரச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் வீதி முறைமையை அபிவிருத்தி செய்யும்	ஆலோசனை சபைக்கு உத்தியோகபூர்வ ரீதியாக 15 அங்கத்தவர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும். பொருளியல், உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்தி, வங்கி	அதிகாரச் சட்டம் அமுல்ப்படுத்தப்படும் திகதியிலிருந்து ஆலோசனை சபை தோற்றுவிக்கப்படாது அதிகாரச்சட்டத்தின் 6(2) ஆம் பிரிவின் கீழ்

	ஆலோசனை சபையை தோற்றுவிக்க வேண்டியதுடன் இக்குழுவினால் உயரமான பெருந்தெருக்கள் கொள்கையை தயாரித்தல், வீதி நிலைமையை மேம்படுத்துதல் வீதி தொடர்பான ஆராய்ச்சிகள், வீதித் திட்டங்கள், வீதி அபிவிருத்தி தொழில் நுட்பம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும்.. எனினும் இந்த ஆலோசனை சபைக்கு அங்கத்தவர்களை நியமித்தல் இடம்பெற்றிருக்காததன் காரணமாக உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	செயற்பாடுகள், மின்சக்தியும் வலு சக்தியும், தொலைத் தொடர்புகள், சட்டம் ஆகிய துறைகள் தொடர்பாக தகமையுள்ள மற்றும் அனுபவமுள்ள நபர்களுக்கு மத்தியில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் 05 அங்கத்தவர்கள் பெயரிடப்படுதல் வேண்டும். இவர்களுக்கு மத்தியில் 04 அங்கத்தவர்களுக்கு நிமயனம் வழங்கப்பட்டுள்ளது.	நிறைவேற்றிய செயற்பர்டுகள் சம்பந்தமாக அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ‘‘வீதி முறைமை சபையை’’ தாமதமின்றி தோற்றுவித்து அமைச்சருக்கு தேவையான ஆலோசனை வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் அதிகாரச்சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் கீழ் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திற்குமாக மாவட்ட வீதி முறைமை ஒருங்கிணைப்பு குழு நியமிக்கப்பட வேண்டியதுடன் வீதி முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரிப்பிற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்தல், அபீவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்தலும் பராமரித்தலும், செயற்திட்டத்தை குறித்த ஒரு தரப்பினருக்கு ஒப்படைத்துலும் கண்காணிப்பு செய்தலும், வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களை பொறுப்பேற்று அமுல்ப்படுத்துவதற்கு சிபாரிசு செய்தல் முதலிய செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும். எனினும் இக்குழுவிற்கு அங்கத்தவர்களை நியமிக்ககாமையின் காரணமாக உரிய கடமைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிமயனங்கள் மற்றும் அதற்குரிய செயற்பாடுகள் இதற்கு முன்னர் பெருந் தெருக்கள் விடத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தற்பொழுது உரிய ஆலோசனை சபையும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவும் செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது. தற்போதைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மாவட்ட வீதி முறைமை ஒருங்கிணைப்பு குழுவினை செயற்படும் மட்டத்திற்கு கொண்டு வருதல் மற்றும் உரிய செயற்பாடுகளை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுதலானது துரிதமாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(இ)	வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற வீதி புனரமைப்பு செயற்திட்டத்திற்காக பெற்றுக் கொள்ளக்கூடிய காணி சம்பந்தமாக காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், காணிகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் மீள்குடியமர்த்தும் குழுவுடன் கலந்துரையாடலினை நடாத்தி மீள்குடியமர்த்துவதற்காக காணிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் காணிகளை தீர்த்துவைத்தல் தொடர்பான நடவடிக்கை எடுத்தல் முதலியன அமைச்சின் காணிப் பிரிவின் செயற்பாடுகளாகும். எனினும் செயற்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற காணிகள் சம்பந்தமாக நாளதுவரையான தரவு முறைமை பேணப்படாததன் காரணமாக இப்பிரிவினால் எதிர்பார்த்த செயற்பாடுகள் வினைத்திறனாக நிறைவேற்றப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மற்றும் செயற்திட்டத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளின் தகவல் முறைமையை நாளதுவரையாகப் பேணும் அதிக தேவைப்பாட்டின் அடிப்படையில் விதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தரவுகளின் தகவல் முறைமையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அமைச்சும் அத்தகவல் முறைமையுடன் தொடர்புபட்டு நடவடிக்கை எடுத்துள்ளது.	தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) ஆம் பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்படுகின்ற காணிகள் சம்பந்தமாக முறையான தகவல் முறைமையை பேணுவது சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துவதற்கும் அமுல்ப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 பிரதான செயற்பாடுகளுக்கு முரணான நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மக நெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனியால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வீதி நிர்மாண செயற்திட்டங்களைப் பெற்று அவற்றின் கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் இலாபத்	கருத்துரைகள் தரப்படவில்லை.	உப ஒப்பந்தம் வழங்குவது சம்பந்தமாக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு அதிகார வரம்பினை மிகைத்து நடவடிக்கை

	தொகையை சேர்த்து உப ஒப்பந்தக்காகரர்களுககு அந்த ஒப்பந்தத்தினை வழங்குவதன் மூலம் மீளாய்வாண்டில் செயற்திட்டங்களை அமுலப்படுத்துவதற்கு நேரடியாக ஈடுபடாது ரூபா 1,386 இலாபம் உழைக்கப்பட்டிருந்தது.		எடுத்தலினை அடையாளங்கண்டு பொறுப்பக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2023 யூலை 13 ஆந் திகதி வழங்கப்பட்ட போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கான அரசாங்க செலவுகளை மீளாய்வு செய்யுமம் குழு (PERC) அறிக்கையின் பிரகாரம் அடுத்துவரும் காலத்தின் போது இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தற்பொழுது புனரமைப்புச் செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதிகளை வாகனம் ஓடக்கூடிய மட்டம் வரை அத்தியவசியமான நவடிக்கைகளை மாத்திரம் மேற்கொண்டு அந்த வீதிகளை உரிய அரசாங்க நிறுவனங்களுக்கு மீள ஒப்படைப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. எனினும் அதற்கு முரணாக முன்னர் வேலை ஆரம்பிக்கப்படாத 05 கிராமிய வீதிகளின் நடவடிக்கைகளை புதிதாக ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது என தெரிவுப பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டது.	கருத்துரை தரப்படவில்லை.	குழுவின் சிபாரிசினை அமுல்ப்படுத்துவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்துகொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	கடவத்தையிலிருந்து தம்புள்ளை வரை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்ட மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் நான்கு கட்டங்களின் கீழ் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் இரண்டாவது கட்டமான மீரிகமவிலிருந்து குருனாகல் வரையான பகுதியை நிர்மாணித்தல் மாத்திரம் முடிவு செய்யப்பட்டு 2022 சனவரி 15 ஆந் திகதி திறக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் கடவத்தையிலிருந்து மீரிகம வரையான முதலாவது கட்டத்தின் நிர்மாணங்கள் முடிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த அதிவேக வீதியின் ஆரம்பமான கடவத்தையிலிருந்து சுற்று வட்டத்திற்கு வெளியே அதிவேக வீதியை இணைக்கின்ற பகுதியை (Ch O+000 to Ch O + 500) நிர்மாணிக்கும் செயற்திட்டமானது ஆரம்ப கட்டத்திலேயே திட்டமிடப்பட்டிருக்காததுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அந்த நிர்மாணங்களின் பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் மத்திய அதிவேக வீதியை பயன்படுத்துதலானது குறைந்த பய்ன்பாட்டிற்கு உட்பட்டு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.	கருத்துரை தரப்படவல்லை.	அதிவேக வீதியின் முதலாவது 500 மீற்றரானது இன்று வரை திட்டமிடுதல் தாமதித்தமை சம்பந்தமாக மற்றும் அதன் மூலம் இழக்கப்பட்ட பொருளாதார நலன்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பகுப்பாய்வுடன் பரீட்சிப்புக்களை மேற்கொண்டு அமைச்சரவைக்கு அறிக்கையிட்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) மகநெகும இமல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனியின் இமல்சன் உற்பத்திசாலையில் 2020 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டுள்ள உற்பத்தியானது 4.77 மில்லியன் லீற்றர் மாத்திரமாகும். அதற்கிகணங்க ஒரு மணித்தியாலத்திற்கு 10,000 உற்பத்தி இயலளவினை க்கொண்ட இந்த இயந்திரம் ஒரு நாளைக்கு ஆகக் குறைந்தது 05 மணித்தியாலங்கள் வீதம் 20 நாட்களுக்கு உற்பத்தி நடைமுறையில் ஈடுபடுத்துவதன் மூலம் வருடாந்தம் 12 மில்லியன் லீற்றர் இமல்சன் உற்பத்தியை பெற்றுக்கொள்ளலாம் என முன்னறிதல் செய்யப்பட்டிருந்தும் அதில் 10 சதவீதமான இயலளவேனும் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனி மூடப்பட்டிருந்ததன் காரணமாக 2023 ஒக்தோபர் 20 ஆந் திகதியிலிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த இயந்திரம் மீண்டும் பொறுப்பேற்கப்பட்டிருந்தும் இன்று வரை உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் இயந்திரம் தற்பொழுது முழுமையாக பயன்படுத்தப்படாது காணப்பட்டது.	கருத்துரை தரப்படவில்லை.	எதிர்பார்த்த உற்பத்தியினை வினைத்திறனாக அடைந்து கொள்ள வேண்டியதுடன் குறைவாகப் பயன்படுத்திக் காணப்படுதல் மற்றும் பொருளாதார நலன்கள் தொடர்பாக பகுப்பாய்வுடன் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிட்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 எதிர்பார்த்த பிரதிபலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டம் - போக்குவரத்து செயற்திட்டத்தை ஆயத்தப்படுத்தும் செயற்திட்டம்		
ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கையொப்பமிடப்பட்ட 3425 ஆம்	போக்குவரத்து செயற்திட்டத்தினை	சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ள

இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ஐ.கு டொலர் 11.36 மில்லியன் மதிப்பீட்டு கிரயத்தடன் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த இச்செயற்திட்டத்தின் கீழ் அடுத்துவரும் 20 ஆண்டுகள் காலத்திற்காக தேசிய போக்குவரத்து முறைமைக்கு பங்களிப்பு செய்வதற்காக இலங்கை புகையிரத சேவையின் கொழும்பு புறநகர் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் பிரதான குறிக்கோளாக இருந்தது. அதற்காக தேவையான முன்னையதான சாத்தியவள ஆய்வு, சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளல், விபரமான திட்டங்களை தயாரித்தல், புகையிரதப் பாதையின் இரு பக்கங்களிலும் (Rail Corridor) குடியிருப்பாவர்களை மீளக்குடியமர்த்துதல், சுற்றாடல் பாதுகாப்பினை திட்டமிடல் என்பன பிரதான செயற்பணிகளாக இருந்தன. அதற்கிணங்க ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ரூபா 1,551.35 மில்லியனுக்கு சமமான ஐ.கு டொலர் 8.52 மில்லியன் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தில் 93 சதவீதமான ரூபா 1,446.95 மில்லியன் சாத்தியவள ஆய்வு மற்றும் விபரமான திட்டத்திற்கான ஆலோசனை சேவைக்காக செலவு செய்து 2021 மார்ச் மாதத்தின் போது அந்த அறிக்கை வரிசை அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஒப்படைத்ததன் பின்னர் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் புகையிரத முறைமையை அபிவிருத்தி செய்யும் மேலதிக நடவடிக்கைகளுக்காக அந்த அறிக்கை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. தயாரிக்கும் வசதிகளின் (TPPF) கீழ் கொழும்புக்கு அண்மையிலுள்ள பிரதேசங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட சாத்தியவள ஆய்வு மற்றும் விபரமான திட்டங்கள் என்பவற்றை தயாரித்தலானது இச்செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. எனினும் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் காணப்பட்ட பொருளாதார பிரச்சினைகளின் காரணமாக இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவது சிக்கலாக இருந்தது. எனினும் தற்பொழுது இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக தேவையான தொடக்க கலந்துரையாடல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செயற்திட்டங்கள் அரசாங்க முதலீட்டு நிகழ்சித்திட்டங்களுக்கு உள்ளடக்கப்பட்டு முன்னுரிமைக்கு இணங்க அமுல்ப்படுத்துவதன் மூலம் செயற்திட்ட நிதியை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத:துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(I) கொம்பனி வீதி உத்தரானந்த மாவத்தை மற்றும் ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தையில் புகையிரத வீதிக்கு மேலாக 02 மேம்பாலங்களை நிர்மாணித்தல் மேம்பாலங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 5,278.08 மில்லியன (வெட் வரியின்றி) ஒப்பந்த தொகைக்கு மாகா இன்ஜினியரிங் கம்பனிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. தொழில் தருனரினால் உப கொடுப்பனவுகள் தாமதித்ததன் காரணமாக ஒப்பந்த பொது நிபந்தனை 16.1 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரினால் 2022 மே 12 ஆந் திகதி ஒப்பந்த வேலைகள் கைவிடப்பட்டிருந்தன. நிலுவைப்பணத்தை செலுத்தியதன் பின்னர் 2023 மார்ச் 01 ஆந் திகதி செயற்திட்டத்தின் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை. ஒப்பந்த காலத்தில் 04 சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2022 மே 12 ஆந் திகதியிலிருநது 2022 திசெம்பர் 27 ஆந் திகதி வரை வேலைகள் கைவிடப்பட்டிருந்த காலப்பகுதிக்காக ஒப்பந்தக்காரரினால் ரூபா 614.87 மில்லியன் வேலைகள் கைவிடும் கிரயத்தினை கோருவதற்கு வேண்டிக்கொள்ளப்பட்டிருந்ததுடன் கோரிக்கைகளை மதிப்பீடு		

	செய்வதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் 2024 யூலை மாத அறிக்கையின் சிபாரிசுக்கு இணங்க ரூபா 427.65 மில்லியனை செலுத்துவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிரந்தது. மேலும் நிர்மாணப் பொருட்களின் விலைத் தளபம்பலின் அளவினை நட்டயீடு செய்வதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் ஒப்பந்தக்காரரினால் இந்த ஒப்பந்தத்திற்காக வேண்டிக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,858.93 மில்லியனான கோரிக்கைகளில் ரூபா 1,055.62 மில்லியன் பெறுமதியினை ஒப்பந்தக்காரருக்கு செலுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. பல்வேறு மேலதிக கிரயங்களின் காரணமாக ஒப்பந்த பெறுமதி 27.04 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இது சம்பந்தமாக பின்வருபவை அவதானிக்கப்பட்டுகின்றன.		
(i)	தொடக்க ஒப்பந்த காலத்தினை மிகைத்து 03 காலநீடிப்புக்கள் (EOT) அங்கீகரிக்கப்பட்டிருந்தது டன் அதன் மூன்றாவது காலநீடிப்பு 2024 மே 17 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. ஒப்பந்தக்காரரினால் 2024 யூலை 28 ஆந் திகதி வரை இன்னுமொரு கால நீடிப்பு 2024 மே 02 ஆந் திகதி வேண்டிக்கொள்ளப்பட்டிரு ந்ததும் அதற்கான அங்கீகாரம் 2024 நவம்பர் 27 ஆந் திகதி வரை தாமதித்திருந்தது.	ஒப்பந்த காலம் 2024 யூலை 28 ஆந் திகதி வரை கால நீடிப்பு செய்வதற்கான அங்கீகாரம் 2024-11-27 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள து. ஒப்பந்தத்தின் அங்கீகரித்த முடிவுசெய்யும் திகதியான 2024 யூலை 28 ஆந் திகதி வரை வேலையை பூரணப்படுத்தி தொழில்தருனரினால் வேலையை பொறுப்பேற்கும் சான்றிதழ் (Taking over certificate) வழங்கப்பட்டுள்ளது.	தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது விடே கவனம் செலுத்தி ஒப்பந்த காலத்தினை மிகைத்து காலநீடிப்பு செய்வது சம்பந்தமான உளளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு எழுததுமூல அறிவுறுத்தலினை வழங்கி கண்காணிப்புச் செய்தல் வேண்டும்.

(ii)	விலைத்தளம்பல்களுக்காக ஒப்பந்தக்காரினால் ரூபா 1,055.62 மில்லியன் தொகையானது 30 ஆம் இலக்க உப கொடுபபனவு சான்றிதழின் கீழ் 2024 யூலை 25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2024 யூலை 26 ஆந திகதிய நானாவித வெளிநாட்டு உதவி பணிப்பாளரினால் அமைச்சின் மேலதிக செயலாளருக்கு (பொறியியலாளர்) விலாசமிடப்பட்ட RDA/MFAP/S1/FO/01/GEN ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் இக்கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு முன்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசினை பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது இரண்டு சந்தர்ப்பங்களின் போது மொத்தப் பெறுமதியான ரூபா 833 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2021 திசெம்பர் 14 ஆந் திகதிய அமைப/21/2084/306/094 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் விலைத் தளம்பல்களுக்கான இழப்பீடு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பட்டினுள் முகாமைத்துவம் செய்யவேண்டும் என காட்டப்பட்டிருந்தது.	உரிய அமைச்சரவை பத்திரம் 2021-12-14 ஆந் திகதி அங்கீகரிக்கட்டிருந்ததனாலும் இந்த ஒப்பந்தம் 2022 மே 02 ஆந் திகதியிருந்து 2022 திசெம்பர் 22 ஆந் திகதி வரை ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்ததனாலும் ஒப்பந்தக்காரர் இந்த விலைத் தளம்பல்களுக்கான வேண்டுதல்களை சமர்ப்பித்திருந்தது 30 ஆம் இலக்க உப கொடுப்பனவு சான்றிதழ்களின் கீழ் 2024-07-25 ஆந் திகதி என்பதனாலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான பாதீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் இக்கொடுப்பனவை மேற்கொள்ளுதல் நடைமுறைச்சாத்தியமற்றதாகும். அதனால் 2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு இக்கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.	இது சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	எனினும் மேற்கூறிய கொடுப்பனவுகள் அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக 2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது.		
(iii)	விலைத் தளம்பல்களுக்காக கொடுப்பனவு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதனால் ஒப்பந்த பெறுமதி அதிகரிப்பதற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு 2024 ஆகஸ்ட் 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 39/2024 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2024 செப்தெம்பர 10 ஆந் திகதி அமைச்சரவையினால் வழங்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியை திருத்தம் செய்வது சம்பந்தமாக உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மற்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிரந்தர பெறுகைக் குழுவின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் இந்த சிபாரிசினை மீண்டும் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தெரிவித்திருந்தும் அக்கட்டளையினை அமுல்ப்படுத்தாது 2024 செப்தெம்பர் 22 ஆந் திகதி விலைத் தளம்பல்களுக்காக ரூபா	இதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழுவின் சிபாரிசு 2024-12-16 ஆந் திகதி நடைபெற்ற பெறுகைக்குழு கூட்டத்தின் போது (பெறுகைக்குழு கூட்டம் இலக்கம் SCAPC/6./2024) அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அத்தீர்மானம் 2025-05-07 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது (அமைப/25/0703/809/015-1) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-

	296 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.		
(iv)	மேம்பாலம் செயற்திட்டமானது நானாவித வெளிநாட்டு உதவி செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு செயற்திட்டமானதுடன் அங்கீகரித்த ஆளணியினரின் பிரகாரம் அதற்காக ஒரு செயற்திட்ட பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அந்த அங்கீகாரத்திற்கு முரணாக 2024 ஆகஸ்ட் 14 ஆந் திகதி அமைச்சு செயலாளரினால் இச்செயற்திட்டத்திற்காக பதில் கடமை பார்க்கும் ஒரு பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த பதில் கடமைபார்க்கும் பணிப்பாளரினால் ஒப்பந்தக்காரரின் ரூபா 833 மில்லியனான மேற்கூறிய கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க இக்கொடுப்பனவுகள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிகார ஒப்படைப்பிற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்ட பொறியியலாளராகவும் இந்த பதில் கடமை பாரக்கும் பணிப்பாளர் செயற்பட்டிருந்ததுடன் அதற்கிணஙக செயற்திட்டத்தின் வேலைப்பகிர்வு சம்பந்தமான உள்ளக	அமைச்சு செயலாளரினால் MPH/HWY/ADM04(iii)/11/PF/MFAP/DPD/02 ஆம் இலக்க 2021-10-12 மற்றும் 2024-08-18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள மேற்கூறிய செயற்திட்டத்தின் பதில் கடமை பார்க்கும் செயற்திட்ட பணிப்பாளர் பதவியின் பிரகாரம் மற்றும் அதிகாரம் ஒப்படைந்கப்பட்டள்ளதன் பிரகாரம் செயற்திட்ட பணிப்பாளருக்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் இந்த பதில் கடமை பார்க்கும் பணிப்பாளரினால் கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிட்ட கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-

கட்டுப்பாடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.		

4.10 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) உள்ளடக்கம் தொடர்புபட்ட அபிவிருத்தி செயற்திட்டம்		
(i) செயற்திட்டத்தினால் 2024 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் ரூபா 3,451.99 மில்லியன் பெறுமதியான கிராமிய வீதிகள் லொட் 07 இன் வீதி புனரமைப்பு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் கேள்வி விலைகள் பொறியியலாளர் மதிப்பீட்டினைவட 19.91 சதவீதத்திற்கும் 30.16 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. பெறுகை கையேட்டின் 7.9.2 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி விலைகள் பொறியியலாளர் மதிப்பீட்டினை விட குறிப்படத்தக்க அளவில் குறைந்த பெறுமதியை கொண்டிருக்குமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிக பெறுமதியைக் கொண்ட செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்வதற்கு	ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களினால் ஒப்பந்த பணத்தில் 10 சதவீதமான செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளது. கேள்வி மதிப்பீட்டின் போது சில சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பெறுமதியானது பொறியியல் மதிப்பீடுகளுடன் ஒப்படுகையில் 19 சதவீதத்திலிருந்து 30 சதவீதம் வரை குறைவானது என தோன்றுகின்றது. எவ்வாறாயினும் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரினால் நியபந்தனைகளுக்கு இணங்க 10 சதவீதமான செயலாற்றல் பிணையை வழங்க வேணடும் என்பதனால் அமைச்சு பெறுகைகுழு அது போதுமானது எனக் கருதியதனால் இப்பொறுப்பினை	ஒப்பந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது சம்பந்தமாக தொழில்தருனரின் ஆபத்தை குறைப்பதற்காக போதியளவு செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இது சம்பந்தமாக தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தி ஒப்பந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு எழுத்துமூல அறிவுறுத்தலினை வழங்கி கண்காணிப்பு செய்தல் வேண்டும்.

	அல்லது கேள்வியை நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் கேள்வி மதிப்பீட்டின் போது ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனைகளில் குறிப்பிட்ட ஒப்பந்த பெறுமதியில் 10 சதவீதமான செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்வதற்கு மேலதிகமாக அப்பிணைப் பெறுமதியை அதிகரிப்பதற்கு உரிய பெறுகைக்குழு தீர்மானித்திருக்கவில்லை. இந்த வீதி புனரமைப்பு நடவடிக்கைகளின் பெளதீக செயல்முன்னேற்றத்தினை தொடக்க ஒப்பந்த காலத்துடன் ஒப்பிடும் போர்து மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் ஒப்பந்த நடவடிக்கைகளை உரிய காலத்தில் முடிவு செய்வதற்கு முடியாமை ஆபத்து காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.	அதிகரிக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	
(ii)	கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட கேள்வி வைக்கும் நடைமுறைகளை (பகுதி 1) மதிப்பீடு செய்தல் மற்றும் தகமை வரையறைகளுக்கு (III ஆம் பிரிவு) இணங்க கேள்விதாரர்களினால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாக ஒப்பந்தகளை முடிவு	கேள்வி மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் அனைத்து பிரிவுகளுக்கும் செயற்திட்ட தலைவர்களுக்கும் படிவங்களை அனுப்பி முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான	மதிப்பீடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் உரிய மதிப்பீடுகளை மேற்கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானங்களை குழு சிபாரிசுகளில் குறிப்பிடப்படாமை சம்பந்தமாக பொறுப்புக்கூற

	செய்தல் (Termination), விசாரணை செய்யப்பட்டு வரும் வழக்கு நடவடிக்கைகள், முன்னைய கால வழக்கு நடவடிக்கைகள் என்பன தொடர்பான தகவல்கள் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கேள்வி மதிப்பீட்டின் போது உரிய பெறுகைக் குழுவினால் இது தொடர்பாக கேள்விதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்கூறிய ஆவணங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க முன்னைய காலத்தில் வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக பூர்த்திசெய்யாத ஒப்பந்தக்காரர்களுக்கு இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.	அனைத்து செயலாற்றல் தகவல்களையும் முன்னைய வழக்கு நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பெற்று அவை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டது. மேலும் ஒப்பந்தக்காரர்களின் வரலாற்றில் பலவீனமான செயலாற்றல் முன்னைய கால வழக்குகள் மற்றும் தற்பொழுது காணப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகளுக்குரிய தகவல்களை கேள்வியுடன் வழங்க வேண்டியதுடன் அதற்கான படிவங்களும் கேளிவியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.	வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	செயற்திட்டத்தினால் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக விலை ஒப்பீட்டு முறைமை (Shopping Method) இன் கீழ் 2023 திசெம்பர் 13 ஆந் திகதி கேள்வி கோரி ரூபா 101,118 பணம் உரிய எழுது கருவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக செலுத்தப்பட்டிருந்தது. அதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மூன்று கேள்வி ஆவணங்களுக்கு மத்தியில் இரண்டு	எழுமாற்றாக தெரிவுசெய்யப்பட்ட தகைமை பெற்ற வழங்குனர்களிடமிருந்து கேள்வி மனுக்கள் கோரப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அக்கேள்விகளை திறக்கும் போதும், மதிப்பீடு செய்யும் போதும் வழங்குனரகளின் கேள்வி மனுக்களில் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கம் ஒரே இலக்கம் என அவதானிக்கப்படவில்லை. ஆகக்குறைந்த விலைக்கு கேள்விகளைச் சமர்ப்பித்த வழங்குனர்களிடமிருந்து செயற்திட்டம் அந்த எழுதுகருவிகளைக்	கேள்வி மனுக்களை கோரல் மற்றும் மதிப்பீடு செய்தல் சம்பந்தமாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு போலியான கேள்வி ஆவணங்கள் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்

கேள்வி ஆவணங்களில் வழங்குனரின் தொலைபேசிகள் ஒரே இலக்கமாக இருந்தன் காரணமாக அக்கேள்வி ஆவணங்கள் போலியாகத் தயாரிக்கப்பட்டிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் இது சம்பந்தமாக எடுக்கப்பட்டிருந்த மேலதிக நடவடிக்கைகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	கொள்வனவு செய்ததுடன் அந்த விலைகளை சந்தை விலைகளுடன் ஒப்பீடு செய்யும் போது நியாயமானது என உறுதிப்படுத்தப்பட்டது.	வேண்டும்.

(ஆ) துறைமுக நுழைவு மேம்பால வீதி செயற்திட்டம்

2024 ஒக்தோபர் 28 ஆந் திகதிய 24/2008/713/009 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம துறைமுக நுழைவு வீதி செயற்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூபா 28,002.22 மில்லியனிலிருந்து ரூபா 68,337.22 மில்லியன் வரை அதிகரிக்கச் செய்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதில் உள்ளடக்கப்பட்ட முழு முரண்களின் பெறுதி 5.91 மில்லியன்களானதுடன் அதில் லோட்டஸ் சுற்று வட்டம், துறைமுக நுழைவு வீதி, டொல் பிளாசா சேவைக்கட்டிடம், ரேம்ஸ் 04, ரேம்ஸ் 03ஆகிய வேலைகளுக்காக முரண் கட்டளை இலக்கம் 60 இன் கீழ் ரூா 5.26 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை மற்றும் உடன்படிக்கை ஆவணங்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் தொடக்க சந்தர்ப்பத்தின் போது	செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வின் போது 02 பிரதான கருதுகோள்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 1. 04 ஆவது சாய்வு, காலிமுகத் திடல் பிரதேசத்தின் கீழ் கடல்சார்ந்த வீதியுடன் இணைப்புச் செய்வதற்காக நிர்ணயிக்கப்படுகின்ற சுரங்கத்துடன் இணைப்புச் செய்யப்பட்டது. 2. 03 ஆவது சாய்வானது இறுதிப் பகுதியான இலங்கை துறைமுக அதிகார சபையினால் அவர்களின் துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும். எவ்வாறாயினும் கொவிட் மற்றும் பொருளாதார பிரச்சினையின் காரணமாக சுரங்க செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படவில்லை .	செயற்திட்டம் தொடக்க சந்தர்ப்பத்தின் போது அடிப்படையான நோக்கெல்லையை உறுதியாக அடையாளம் காணாமை சம்பந்தமாக முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக் கு தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	அடிப்படையாக அடையாளங்காணப்பட வேண்டிய விடயம் அடையாளம் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.		
(இ)	**ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் I**		
	2022 ஆம் ஆண்டில் ஆர்.எம்.சீ-04 பெக்கேஜில் பெல்மடுல்ல - எம்பிலிபிடிய- நோனாகம வீதியின் முரண்களின் கீழ் 2022 ஆம் ஆண்டில் பலாங்கொட - போவத்த - கல்தொட வீதி புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்த வீதியின் முழு நீளம் 16 கிலோ மீற்றர் ஆனதுடன் எந்த பெறுகை நடைமுறையும் பின்பற்றப்படாது பெல்மடுல்ல-எம்பிலிபிடிய - நோனாகம வீதியின் புனரமைப்புச் செய்யும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த 04 ஒப்பந்தக்காரர்களுக்கும் ஒப்பந்த நடவடிக்கைகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த நிர்மாணங்கள் சம்பந்தமாக ஒப்பந்தக்கார்களுக்குச் செலுத்தப்பட்ட பெறுமதியும் கொடுப்பனவு செய்வதற்கான அங்கீகாரமும் கணககாய்விற்கு வெளிப்படுத்தப்படாததுடன் அமைச்சின் மூலம் தொடக்க மதிப்பீட்டுக்களை நடாத்தி உரிய அறிக்கை பணிப்பாளர் நாயகத்தினால் (பொறியியலாளர்) 2023 நவம்பர் 30 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இப்புலனாய்வின் பின்னர எடுக்கப்பட்ட மேலதிக நடவடிக்கைகள் சம்பந்தமான சான்றுகள் கணக்காய்விற்கு வெளிப்படவில்லை	கருத்துரை தரப்படவில்லை.	பெறுகை வழிகாட்டிக் கோவை நிபந்தனைகளுக்கு இணங்கியிருக்காமை சம்பந்தமான பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ள உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVII இன் 08 ஆம் பிரிவின் பிரகாரம் விசாரணைகளை நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.11 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சின் KD-9204 ஆம் இலக்க NISSAN கார் சந்தையில் உதிரிப்பாகங்களுக்கான தட்டுப்பாடு, காணப்படுகின்ற உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் செயற்திறன் குறைவடைந்திருத்தல் என்பனவற்றின் காரணமாக செயற்படுத்துவது வினைத்திறனற்றது என்பதனால் மீண்டும் போக்குவரத்து அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்தை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் குழுவின் மூலம் ்பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு 2024 ஆகஸ்ட் 26 ஆந் திகதி ரூபா 2.4 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் இன்றுவரை இந்த வாகனம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை.	அரசாங்கத்திற்கு அதிக செலவுச் சுமையான சொகுசு வாகனங்களை கைதவிர்ப்புச் செய்யும் நடைமுறையின் கீழ் KD -9204 ஆம் இலக்க இந்த வாகனம் கேள்வி மூலம் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பரகாரம் கைதவிர்ப்பு நடவடிக்கை செய்யப்படுதல் வேண்டும்.
(ii)	நெடுஞ்சாலைகள் பிரிவின் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட KQ-0690 ஆம் இலக்க வாகனம் அமைச்சினால் 2025 ஏப்ரல் 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பித்த வாகன தகவல்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த வாகனங்கள் பௌதீக ரீதியாக அமைச்சிடம்	KQ-0690 ஆம் இலக்க வாகனம் சனாதிபதி செயலகத்திற்கு தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப்பட்ட ஒரு வாகனம் என்பதுடன் அந்த வாகனத்தை முறைப்படியாக சனாதிபதி செயலகத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றத.	தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தி வாகனம் சம்பந்தமாக முறையான பதிவேட்டினைப் பேணுவது சம்பந்தமான

	காணப்படுகின்றது என்பதுவும் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.		உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு எழுத்துமூல அறிவுறுத்தலினை வழங்கி கண்காணிப்பு செய்தல் வேணடும்
(iii)	**மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனி**		
	(I) கம்பனியை கலைக்கும் நடவடிக்கைகளுக்காக 2023 மார்ச் மாதத்திலிருந்து செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதன் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வாடகை அடிப்படையில் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த 248 சொத்து விடயங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்படாது கம்பனி வளவிலும் வேலைத்தளத்திலும் வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையான சொத்துக்களுக்கு மத்தியில் 83 விடயங்கள் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்ட திகதியில் உள்ளவாறான புத்தகப் பெறுமதி ரூபா 71.84 மில்லியனாக இருந்ததுடன் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 165 நிலையான சொத்து விடயங்கள் காணப்பட்டது என அவதானிக்கப்பட்ட போதிலும் அமைச்சினால் இது சம்பந்தமாக முறையான கண்காணிப்பு செய்யப்படவில்லை.	கருத்துரை தரப்டபிவ்லலை.	வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வாடகை அடிப்படையில் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மீளப்பொறுப்பேற்பதற்கு முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டியதுடன் இது சம்பந்தமாக தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தி உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு எழுத்துமூல அறிவுறுத்தலினை வழங்கி கண்காணிப்பு செய்தல் வேணடும்.

(II)	2024 ஒக்தோபர் 03 ஆந் திகதியில் உள்ளவாறு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 591.22 மில்லியனான மோட்டார் வாகனம், பொறி மற்றும் இயந்திர உபகரணங்கள் கணக்காய்வுத் திகதி வரை கம்பனியின் வளவிலும் வேலைத்தளங்களிலும் வைக்கப்பட்டிருந்ததுடன் இச்சொத்துக்கள் கம்பனியின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்ட 2023 மார்ச் மாதத்திலிருந்து குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டன. இந்த நிலையான சொத்துக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு முறைப்படியாக ஒப்படைப்பதற்கு கம்பனி இதுவரை நடவடிக்கை எடுத்திருக்காத போதிலும் அமைச்சினால் அந்த நடவடிக்கை கண்காணிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.	கருத்துரை தரப்படவில்லை.	தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான முறைமை மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தி உரிய சொத்துக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீள ஒப்படைப்பதற்கு ஒரு வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட வேண்டியதுடன் இது சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு எழுத்துமூல அறிவுறுத்தலினை வழங்கி கண்காணிப்பு செய்தல் வேண்டும்.

(iv) மாத்தறை கதிர்காமம் புதிய புகையிரத வீதி செயற்திட்டம் (தெற்கு கரையோர புகையிரத வீதியை மேம்படுத்துதல்)

மாத்தறை கதிர்காமம் புதிய புகையிரத வீதிச் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை முடிவு செய்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதி நடவடிக்கை மூடப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட டொயோடா Hilux வகையான 06 டபிள் கெப் வாகனங்கள்	செயற்திட்ட காலம் முடிவடைந்ததன் பின்னர் மீள ஏற்றுமதி செய்தலின் அடிப்படையில் இதில் குறிப்பிட்டுள்ள 06 வாகனங்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதனால் (China National Machinery Import and Export Corporation இற்கு	வாகன இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சம்பந்தமாக பரீட்சிப்புக்களை நடாத்தி உரிய வாகனங்கள் மற்றும் செலுத்தப்பட்ட இறக்குமதி வரி சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயலாளரின் பெயரில் இறக்குமதி செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டிருந்துடன் இந்த வாகனங்களுக்காக அமைச்சின் மூலம் இலங்கை சுங்கத்திற்கு ரூபா 23.33 மில்லியன் இறக்குமதி வரி மற்றும் கட்டணங்களாக செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த வாகனங்களின் பெறுகைக் கிரயமானது போக்குவரத்து அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக தேவையான சான்றுகள் போக்குவரத்து அமைச்சிடம் இல்லாத்திருந்ததன் காரணமாக செய்றதிட்ட நடவடிக்கைகளுக்காக இறக்குமதி செய்து போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயலாளரின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட இந்த வாகனங்களின் பௌதீக பயன்பாடு தற்பொழுது ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.	மேற்கூறிய வாகனங்களை மீள ஏற்றுமதி செய்து அமைச்சு செயலாளருக்கு தெரிவிக்குமாறு பணிப்பாளர் நாயகம் அரசாங்க நிதி கொள்கை மற்றும் பணிப்பாளர் நாயகம் சுங்கத்திற்கான பிரதியுடன் 2025/01/20, 22/07, 03/07 மற்றும் 04/22 ஆம் திகதிய கடிதங்களின் மூலம் தெரியப்படுத்தியிருந்த போதிலும் இன்றுவரை பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை.	பொறுப்பை நிறைவேற்றத் தவறியுள்ள உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.12 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பதிவழிக்கப்படாது முன்கொண்டுவரப்பட்ட மீதி ரூபா 13.01 மில்லியனானது முன்னைய ஆண்டுகளின் போது ஏற்பட்ட நட்டங்கள் மற்றும்		

விட்டுவிடுதல்கள் ஆனதுடன் இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i)	போக்குவரத்து பிரிவின் PF-6319 ஆம் இலக்க கெப் வாகனம் 2022 யூலை 11 ஆந் திகதி ஒரு காருடன் மோதியதனால் கொள்ளுபிடியில் இடம்பெற்ற விபத்து சம்பந்தமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரீட்சிப்புக்களை நடாத்தி அப்பரீட்சிப்புக்கு இணங்க கெப் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து ஏற்படுத்திய கார் சாரதியின் பிழையினால் ஏற்பட்டது என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. கெப் வாகனத்தை திருத்தம் செய்வதற்காக ரூபா 1.11 மில்லியன் பணம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் காப்புறுதி நட்டயீடாக ரூபா 0.74 மில்லியன் கிடைத்திருந்தது. அதற்கிணங்க ஏற்பட்டுள்ள ரூபா 0.37 மில்லியன நட்டமானது அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை .	இந்த திடீர் விபத்து தொடர்பாக கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு 2023-05-03 ஆந் திகதி முடிவடைந்ததன் பின்னர் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் ஆகிய ரூபா 0.37 மில்லியன் பணம் குற்றவாளியானவர் அரசாங்க தரப்பினர் அல்லாதனால் ஒரு சிவில் வழக்கினைத் தொடுத்து அறவீடு செய்வதற்காக 2023-05-09 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள துடன் இதனை அறவீடு செய்வதற்குரிய மேலதிக நடவடிக்கை சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.	நட்டத்தை அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	கிராமிய வீதி அபிவிருத்தி பிரிவின் KR 5447 ஆம் இலக்க மோட்டார் வாகனம் 2023 ஏப்ரல் 03 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன் அதன் நட்டம் ரூபா 6.2 மில்லியனாக அடையாளம்	காப்புறுதி நிறுவனத்தினூடாக உரிய இழப்பீட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அந்த வாகனத்தை மீண்டும் திருத்தம் செய்ய முடியாது என முகவர்	வாகன விபத்து மற்றும் நட்டத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக விசாரணைகளை நடாத்தி நட்டத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	காணப்பட்டிருந்தது. அந்த நட்டத்தை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதன் பௌதீக உள்ளமையும் உறுதிப்படுத்தப்படவில்லை.	நிறுவனத்தினால் தெரியப்படுத்தியுள்ளதனால் இழப்பீட்டினை வழங்கும் போது காப்புறுதி நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்காக அங்குலான மோட்டார் வாகன நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.	பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	கிராமிய வீதிப் பிரிவின் CAU 0786 ஆம் இலக்க மோட்டார் வாகனம் 75129 கி.மீற்றர் மாத்திரம் ஓடியிருந்தும் விபத்திற்கு உள்ளாகியுள்ளது எனக் குறிப்பிட்டு அமைசசினால் ரூபா 6.15 மில்லியன் செலவு செய்து திருத்தம் செய்யப்பட்டிருந்தும் அச்செலவினை காப்புறுதி கம்பனியிடமிருந்து மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நெடுஞ்சாலைகள் பிரிவின் சொத்துக்கள் பதிவேடு, நெடுஞ்சாலைகள் பிரிவிற்குரிய வாகனங்கள் சம்பந்தமான தகவல்களை விசாரித்தமைக்குரிய பதிலாக தொடர்புபட்ட போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரின் MOH/HWY/ADM-19/AUDIT/2020(III) ஆம் இலக்க 2025 ஏப்ரல் 23 ஆந் திகதிய கடிதம், 2024 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கை ஆகிய எந்த	CAU 0786 ஆம் இலக்க மோட்டார் வாகனத்தின் புலனாய்வு நடவடிக்கைகளின் மூலம் பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளம் காணக்கூடிய அளவிற்கு தகவல்கள் வெளிப்படுத்தப்படாமையின் காரணமாக மேலும் புலனாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதற்கிணங்க செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தொடக்க அறிக்கையினை தயாரிப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் 2025-04-17 ஆந் திகதி தொடக்க அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வாகனம் சனாதிபதீ செயலகத்தின் நடவடிக்கைகளுக்காக தற்காலிகமாக அனுப்பிவைக்கப்பட்ட ஒரு வாகனமாகும். அந்த வாகனத்தை மீண்டும் இந்த அமைச்சிற்கு ஒப்படைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சனாதிபதி செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுளதுடன் அதனைப்	வாகன விபத்து திருத்தம் செய்தல் மற்றும் உள்ளமை சம்பந்தமாக விசாரணைகளை நடாத்தி நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வாகனங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வாகனத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	ஆவணமும் இந்த வாகனம் தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த மோட்டார் வாகனத்தின் பௌதீகரீதியான உள்ளமையை உறுதிப்படுத்தியிருக்காததுடன் அதன் நட்டம் தொடர்பான தகவல்களும் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.	பொறுப்பேற்பதற்காக பொருத்தமான ஒரு உத்தியோகத்தரும் பெயரிடப்பட்டு அனுப்பிவக்கப்பட்டுள்து. எதிர் காலத்தில் அந்த வாகனத்தை முறைப்படியாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஆ)	ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்சித்திட்டம் - கட்டம் I இன் கீழ் கே.எல் - 01 ஒப்பந்த பெக்கேஜ் மூலம் ரூபா 7.47 மில்லியன் டபிள் கெப் வாகனம் உரிய பெக்கேஜின் வீதி புனரமைப்பினை முடிவு செய்து வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்கு முன்னர் 2019 திசெம்பர் 07 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி இருந்தது. வாகனத்தை திருத்தம் செய்வதற்காக ரூபா 6.93 மில்லின் செலவு செய்திருந்த போதிலும் காப்புறுதியின் கீழ் ரூபா 4.00 மில்லியன் மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த ரூபா 2.93 மில்லியன் நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வாகன விபத்து சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் புலனாய்வு நடவடிக்கை முடிவு செய்யப்பட்டிருக்கவில்லை.	கருத்துரை தரப்படவில்லை.	வாகன விபத்து, திருத்தம் செய்தல் காப்புறுதி இழப்பீடு என்பன சம்பந்தமாக விசாரணைகளை நடாத்தி நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேணடும்.

4.13 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு ஐய வினா தொடர்பான விபரம்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராமிய மக்களுக்கும் சமூக பொருளாதார நிலையங்களுக்கும் இடையேயான நுழைவு வீதியினை மேம்படுத்தும் செயலாற்றல் அறிக்கை என்ற தலைப்பிலான 2025 மார்ச் 27 ஆந் திகதிய RAH/A/iRoad/4/24/B/AQ/07 ஆம் இலக்க கணக்காய்வு ஐய வினா அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தும் அதற்கான பதில் 163 நாட்கள் தாமதித்து 2025 செப்தெம்பர் 22 ஆந் திகதி கிடைத்திருந்தது.	கருத்துரை தரப்படவில்லை.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 (1)(உ) ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்துதல் வேண்டும்.

4.14 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) பிணக்குகளை தீர்த்துவைக்கும் நடைமுறைகளை மேற்கொள்ளல். நெடுஞ்சாலைகள் பிரிவினால் 2005 - 2024 காலப்பகுதியில் அமுல்ப்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக சில ஒப்பந்தக்காரரினால் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காக தொடர்புகொள்ளப்பட்டுள்ளதுடன் அவ்வாறு பிணக்குகளை தீர்த்துவைப்பதற்காக ஒவ்வொரு செயற்திட்டம் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் அவ்வாறு பிணக்குகளை தீர்த்துவைப்பதற்காக		

அச்செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பாக பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i)	பிணக்குகளை தீர்த்துவைப்பதற்காக தொர்புபட்டுள்ள செயற்திட்டம் என்ற தலைப்பில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரின MOH/ACC/13/2024/04 ஆம் இலக்க 2025 சனவரி 10 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்விற்குச் சமர்பித்த தகவல்களின் பிரகாரம் 2024 ஒக்தோபர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மூடப்பட்டுள்ள 05 செயற்திட்டங்களில் 04 செயறதிட்டங்கள் பிணக்குகளை தீர்த்துவைக்கும் நடைமுறைகளுக்கு தொடர்புட்டுள்ளதுடன் அந்த 04 செயற்திட்டங்களில் 03 செயற்திட்டங்களுக்காக பிணக்கு நியாய சபை தீர்ப்பு வழங்கியிருந்தது. மேலும் அந்த 03 செயற்திட்டங்களின் மூலம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க இரு தரப்பினரின் இணக்கப்பாட்டில் அல்லது நியாய சபையின் மூலம் பிணக்குகள் தீர்த்துவைப்பதற்கு அனுப்பிவைகப்பட்டுள்ளன	கருத்துரை தரப்படவில்லை.	ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தொழில் தருனரின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள் வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	. தற்பொழுது செயற்படுத்தப்படுகின்ற 07 செயற்திட்டங்களில் 04 செய்றதிட்டங்கள் பிணக்குகளை தீர்த்துவைப்பதற்காகருந்தன. அச்செயற்திட்டங்களால் 06 சந்தர்ப்பங்களின் போது பிணக்கு நியாய சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் 02 சந்தர்ப்பங்களின் போது நேரடியாக இரண்டு தரபபினர்களினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் பிணக்குகள் தீர்த்து வைப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.		
(ii)	பிணக்குகளை தீர்த்துவைக்கும் நடைமுறைக்கு தொடர்புடுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களின் 02 சந்தர்ப்பங்களின் போது 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பிணக்குகளின் நியாய சபை தீர்ப்பு வழங்கப்படாதிருந்ததுடன் 08 சந்தர்ப்பங்களுக்காக பிணக்குகளின் நியாய சபை மற்றும் இரு தரப்பினரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த தீர்ப்பு தொழில்தருனருக்கு சாதகமற்றதாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிணக்குகளைத்	கருத்துரைகள் தரப்படவில்லை.	ஒப்பந்த உடன்படிக்கைகளின் நிபந்தனைகளுக்கு இணங்க பிணக்குகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தொழில் தருனரின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்

	தீர்த்துவைக்கும் நடைமுறைக்காக செயற்திட்டத்தினால் ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 482.01 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 425.49 மில்லியன் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மேலும் 02 சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்த்க்காரர்களுக்கு கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.		வேண்டும்.
(iii)	ருவன்புர அதிவேக வீதி செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரரினால் 2022 ஒக்தோபர் 10 ஆந் திகதி வேலை இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் விலைப்பட்டியல்கள் உரிய வேளைக்கு செலுத்தப்படாமையின் அடிப்படையில் 2022 திசெம்பர 24 ஆந் திகதி பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்காக பிணக்குகள் நியாய சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. FIDIC ஒப்பந்த நிபந்தனைகளின் 20.4 ஆம் நிபந்தனையின் பிரகாரம் பிணக்குகளை நியாய சபைக்கு அனுப்பிவைத்து 84 நாட்களுக்குள் பிணக்குகளுக்கு நியாய சபையின் தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய போதிலும் 2025 சனவரி 10 ஆந் திகதி வரையும் அதாவது 759 நாட்களை மிகைத்திருந்தும் பிணக்குகளுக்கு நியாய சபையின் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.	கருத்துரை தரப்படவில்லை.	ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க பிணக்குகளை தீர்த்துவைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தாமதங்கள் சம்பந்தமாக பொறுப்பக்கூற வேண்டிய உத்திரோயகத்தர்களுக்கு தாபன விதிக் கோவையினனன் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iv)	FIDIC நிபந்தனை 20.4 இன் பிரகாரம் பிணக்குகள் சம்பந்தமான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு 84 நாட்களுக்குள் பிணக்குகள் நியாய சபையின் தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய போதிலும் ஐ.- வீதி செயற்திட்டங்களுக்குரிய தெரிவுப் பரீட்சிப்பின் போது அதனை மிகைத்ததன் பின்னர் தீர்ப்பு வழங்கப்பட்ட 03 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தாமத நாட்கள் 205 இலிருந்து 384 வரையான விச்சில் காணப்பட்டது.	கருத்துரை தரப்படவிலலை.	உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க பிணக்குகளை தீர்த்துவைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தாமதங்கள் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	ஐ.வீதிச் செயற்திட்டத்திற்குரிய தெரிவுப் பரீட்சிப்பிற்கு இணங்க பிணக்குகள் தீர்ப்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள 05 சந்தர்ப்பங்களிலும் ஒப்பந்தக்காரருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் 04 சந்தர்ப்பங்களின் போதும் தொழில் தருனரினால் அதிருப்தி தொடர்பான விளம்பரம்/ அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. அந்த சாதகமற்ற தீப்புக்காக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளங்கண்டு ஒழுக்காற்று நடவடிகசை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கருத்துரை தரப்படவில்லை.	சாதகமற்ற திர்ப்பக்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பிர்களை அடையாளங்கண்டு தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்ாற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(vi)	கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஒவ்வொரு	கருத்துரை தரப்படவில்லை.	முறையான ஒப்பந்த முகாமைத்துவத்தின் மூலம் பிணக்குகளைக் குறைப்பதற்கும் அதன்

செயற்திட்டத்தினாலும் தமது பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் நடைமுறைக்காக அதாவது பிணக்குகள் நியாயசபைக்கு 2024 ஒக்தோபர 31 ஆந் திகதியில் ரூபா 25.07 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.		மூலம் மேலதிக கிரயத்தை குறைப்பதற்கும் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) மகநெகும இமல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளை கைவிடுதல்		
சுயவிருப்பில் ஓய்வுபெறும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியதன் மூலம் ஆளணியினரைக் குறைத்ததன் பின்னர் மூன்று மகநெகும கம்பனிகளை ஒன்றிணைத்து ஒரு தனிக் கம்பனியை தோற்றுவிக்க 2023 மார்ச் 28 ஆந் திகதிய 23/0394/608/033 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2023 யூலை 31 ஆந் திகதியிலிருந்து கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் முடிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 ஆகஸ்ட் 07 ஆந் திகதி கம்பனியில் நடைபெற்ற அதி விசேட பொதுக் கூட்டத்தின் போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 319(1) ஆம் பிரிவின் கீழ் ஒரு தலைபபட்சமாக சுயமாக கலைப்பதற்கான விசேட பிரேரணை அங்கீகரிக்கப்பட்டிருந்தது என அதிவிசேட பொதுக் கூட்ட அறிக்கை கம்பனியின் செயலாளரினால் சர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான அதிவிசேட பொதுச் சபைக் கூட்டத்தினை	கருத்துரை தரப்படவில்லை.	அமைச்சரவை தீர்மானத்தை அமுல்ப்படுத்தாதிருந்தமை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நடாத்துவதற்கு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி மேற்கூறிய உத்தியோகத்தர்களுக்கு அக்கூட்டங்களுக்கு பங்குபற்றுவதற்கு மற்றும் அவ்வாறான தீர்மானத்திற்கான இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அதற்கிணங்க இக்கம்பனியை கலைக்கும் மேற்கூறிய அமைச்சரவை தீர்மானத்தை அமுல்ப்படுத்தாதிருந்த போதிலும் அமைச்சு அந்த நடவடிக்கையை கண்காணிப்பு செய்திருக்கவில்லை.

(இ) 100,000 கிலோ மீற்றர் வீதி நிகழ்சித்திட்டம்

வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 2020 சனவரி 14 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் 100,000 கிலோ மீற்றர் நிழ்சித்திட்ட அவதானிப்பின் (Monitoring of the Program) கீழ் பிரதான செயற்திட்ட செயற்பாட்டுக் குழுவிற்கு மேலதிகமாக மாகாண வீதி செயல்முன்னேற்றத்தினை அவதானிப்புச் செய்வதற்காக தனியாக ஒரு மாகாண செயற்பாட்டு குழுவும் (Provincial Streering Committee) ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என காட்டப்பட்டிருந்தும் அந்த விஞ்ஞாபனத்தின் பிரகாரம் உரிய குழுவினை ஸ்தாபிப்பதற்கு செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்காக புரிந்துணர்வு கருத்தரங்கு அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்டது. தொடர்ச்சியாக மாகாண அலுவலகத்திற்குச் சென்று செயல்முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் நாத்தப்பட்டன. அதற்கு மேலதிகமாக மகநெகும தலைமை அலுவலகத்திலும் செயல்முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.	அமைச்சரவை தீர்மானத்தினை அமுல்ப்படுத்தாமை சம்பந்தமாக பொறுப்புக்கூய வேண்டிய உத்தியோகத்ரகளுக் கு எதிராக தாபன விதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிககை எடுத்தல் வேண்டும்.

(ஈ)	ஒப்பந்த கொடுப்பனவுகளை தாமதித்தல் மற்றும் மிகுதியான வீதி புனரமைப்பு நடவடிக்கைகளின் நோக்கெல்லையை மட்டுப்படுத்துவதன் காரணமாக ஒருங்கிணைந்த வீதி முதலீட:டு நிகழ்சித்திட்டம் மற்றும் இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிழ்சித்திட்டங்களிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 10,647.88 மில்லியன் மொத்த பெறுமதியினை அறவீடு செய்யும் இயலுமை நிச்சயமற்றதாக காணப்பட்டது.	கருத்துரை தரப்படவில்லை.	நோக்கெல்லையை மட்டுப்படுததுதல் மற்றும் அதன் கீழ் ஒப்பந்தங்களை தெரிவுசெய்தல் சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் முற்பண பிணையை பணமாக்குவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்சித்திட்டம் மற்றும் இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில் தருனர் மற்றும் ஒப்பந்தக்காரரினால் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இரத்துச் செய்யப்பட்ட ஒப்பந்த பெக்கேஜ்களிலிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 3,528.98 மில்லியன் வேலையை ஆரம்பிக்கும் முற்பணம் மற்றும் ரூபா 2,290.29 மில்லியன் செயலாற்றல பிணைப்பணம் மீளாய்வாணடின் இறுதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தக்காரரினால் இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் பிணையை பணமாக்குவதற்கு எதிராக தடை உத்தரவு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.	கருத்துரை தரப்படவில்லை.	முற்பண பிணையை பணமாக்குவதற்கு தேவையான சட்டரீதியான நடவடிக்கை தாமதமின்றி எடுக்கப்பட வேண்டியதுடன் முறையான விசாரணைகளின் பின்னர் நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5 மனிதவளங்கள் முகாமைத:துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு	சிபாரிசுகள்

	உத்தியோகத்தரின் கருத்துரைகள்	
(அ) அமைச்சில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஆளணியினர் சேர்மானம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.		
(i) 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் அங்கீகரித்த ஆளணியினர் மற்றும் உள்ளபடியான அளணியினர் தொடர்பாக அவதானிப்பு செய்யும் போது 33 பதவிகளில் 115 வெற்றிடங்களும் ஒரு பதவியில் ஒரு மிகையும் அவதானிக்கப்பட்டது. அத்தகவல்களுக்கு இணங்க சிரேஷ்ட மட்டத்திலுள்ள 16 பதவிகளில் 19 வெற்றிடங்களும் மூன்றாம் மட்டத்திலுள்ள 04 பதவிகளில் 04 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்திலுள்ள 09 பதவிகளில் 67 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தைச் சேர்ந்த 05 பதவிகளில் 26 வெற்றிடங்களும் ஒரு பதவியில் ஒரு மிகையும் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளின் தேவைப்பாட்டினை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி மேலும் தேவையில்லாத பதவிகளை குறைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கருத்துரை தரப்படவிலலை.	மிகையாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்படுதல் வேண்டும். வெற்றிடம் காணப்படுகின்ற பதவிகளின் தேவைப்பாட்டினை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி மேலும் தேவைப்பாடாத பதவிகளை குறைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii)	அரசாங்க நிருவாக அமைச்சினால் வழங்கப்பட்ட 2018-01-24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 6.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவன பதவியில் ஒவ்வொரு படி நிலைக்குமான தனித்துவமான திறன் இலக்கினை நிறைவேற்றும் வகையில் பொருத்தமான இயலளவு அபிவிருத்தி நிகழச்சித்திட்டங்களை நடாத்துதல் உத்தேசிக்கப்பட்டிருந்தும் அமைச்சினால் மேற்கூறிய சுற்றறிக்கையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளவாறு சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவிகளுக்காக தந்திரோபாய முகாமைத்துவம், அரசாங்க நிதிக்கொள்கை மற்றும் நிதி முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், மாற்றம் செய்யும் முகாமைத்துவம், அபிவிருத்தி நிருவாகம், இலங்கையின் பொருளாதார கொள்கை, வினைத்திறனை அதிகரிப்பதுடன் தொடர்புபட்ட பயிற்சி நிகழ்சித்திட்டங்கள் என்பன வருடாந்த பயிற்சி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	தந்திரோபாய முகாமைத்துவம், அரசாங்க நிதி கொள்கை மற்றும் நிதி முாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள் பயிற்சி தேவைப்பாட்டு பகுப்பாய்வில் இல்லாததனால் மேற்கூறிய நிகழச்சித்திட்டங்கள் பயிற்சி திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. நாடளாவிய சேவையிலுள்ள வெற்றிடங்களுக்காக நியமிக்குமாறு அரசாங்க நிருவாக அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டது.	சுற்றறிக்கையின் பிரகாரம் திறன் இலக்கினை நிறைவேற்றும் வகையில் பொருத்தமான இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iii)	வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் சம்பளம் செலுத்தப்படுகின்ற 18 உத்தியோகத்தர்கள் அமைச்சின கீழ் சேவையில் ஈடுபட்டிருந்தனர். மேலும் அமைச்சின் மூலம் சம்பளத்தை பெற்றுக்கொள்கின்ற ஒரு உத்தியோகத்தர் மஹர பிரதேச செயலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்.	அமைசசினால் அரசாங்க உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லாததனால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.	நியதிச்சட்ட நிறுவனத்தின் பௌதீக மற்றும் மனித வளங்களை நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாதிருக்க வேண்டியதுடன் அமைச்சின் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான ஆய்வினை மேற்கொண்டு வினைத்திறனாக இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தெரிவுசெய்யப்பட்ட 15 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்ட மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் அமைச்சிடம் காணப்பட்டிருந்தும் ஆண்டின் போது 08 பயிற்சி நிகழ்சித்திட்டங்கள் மாத்திரம் அமல்ப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2024 ஆம் ஆண்டிற்கான மனித வளங்கள் அபிவிருத்தி திட்டத்தின் செயல்முன்னேற்றம் 53 சதவீதமாகும்	பயிற்சி நிகழ்சித்திட்டங்களினால் 16 மணித்தியால பயிற்சிக்காலம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக தனித்தனியாக பயிற்சி செயலமர்வுகளுக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. பயிற்சி நிகழ்சித்திட்டங்களை திட்டங்களுக்கு ஏற்ப நடாத்துவதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.	மனித வளங்கள் அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பயிற்சி நிகழ்சித்திட்டங்களை உரிய காலத்தில் செய்ற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	2024 ஆம் ஆண்டில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவிகளுக்கான 06 பயிற்சி நிகழ்சித்திட்டங்கள், இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள	கருத்துரை தரப்படவில்லை.	நிறுவனத்தின் வருடாந்த பயிற்சி திட்டத்தினை ஆக்கபூர்வமான ஒரு கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்துவதற்கு

பதவிகளுக்கான 11 நிகழ்சித்திட்டங்கள் என்பன போக்குவரத்து பிரிவின் மூலம் திட்டமிடப்பட்டிருந்தும் மனித வளங்கள் திட்டத்தின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளவாறு பயிற்சி கற்கை நெறிகள் நடாத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டதனால் நிறுவனத்தின் மனித வளங்களின் அடிப்படையான மற்றும் தொழில்நுட்ப ரீதியான திறன்களை திட்டமிட்டு அபிவிருத்தி செய்வதற்காக வருடாந்த பயிற்சி திட்டமானது ஆக்கபூர்வமான ஒரு கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.			தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(vi) உள்ளடக்கம் தொடர்புபட்ட அபிவிருத்தி செய்றதிட்டம்

(அ)	2007 ஆம் ஆண்டின் ஆலோசகர்களைத் தெரிவு செய்தல் சம்பந்தமான வழிகாட்டிக் கோவை மற்றும் 2014 யூலை மாத உலக வங்கி கடன் பெறுபவர்களின் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க ஆலோசனை சேவை என்பது	இச்செயற்திட்டத்திற்கு 19 முகாமைத்துவ உதவியாளர்கள் வேண்டிக்கொள்ளப்பட்டது. எனினும் இரண்டு பதவிகள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டு மிகுதி ஆளணியினரை 100,000 கிலோ மீற்றர் வீதி நிகழ்ச்சித்திட்டத்திற்கு அங்கீகரித்த ஆளணியிலிருந்து சேர்த்துக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க செயற்திட்டத்தினை தாமதமின்றி	அங்கீகரித்த ஆளணிக்குள் மாத்திரம் ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தேவையான திருத்தங்களை முறைப்படியாக முன் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

	அறிவு சார்ந்த மற்றும் ஆலோசனைத் தன்மையான (Intellectual and advisory nature) சேவையாகும். செயற்திட்டத்தினால் 2021 ஒக்தோபர் 22 ஆந் திகதி செயற்திட்டத்தின் அங்கீகரித்த ஆளணிக்கு மேலதிகமாக ஆலோசகர்களாக (Individual Consultants) 03 முகாமைத்துவ உதவியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவர்களுக்கு ரூபா 13.68 மில்லியன் சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.	செயற்படுத்தும் தேவைப்பாட்டின் அடிப்படையில் மேற்கூறிய ஊழியர் வெற்றிடத்தினை உலக வங்கியுடன் கலந்துரையாடி அமைச்சின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு தனி ஆலோசகர் சேவையினூடாக 07 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுககு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.	
(ஆ)	செயற்திட்டத்தினால் அலுவலக உதவியாளர், பாதுகாப்பு உத்தியோகத்தர், வேலையாட்கள் ஆகிய ஆரம்ப மட்ட பதவிகளுக்காக அங்கீகரித்த ஆளணியினருக்கு புறம்பாக 10 உழியர்கள்	21 ஊழியர்களுக்கு அங்கீகராம் வழங்கப்பட்டிருந்தது. சிற்றுாழியர் ஆளணியினரை பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணியினாடாக (MDTF) பெற்றுக்கொள்ள வேண்டுமென தெரியப்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்கு தேவையான சிற்றுாழிய ஆளணியினரை மேற்கூறிய	-மேற்படி-

சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 6.02 மில்லியன் வருடாந்த செயற்பாட்டு கிரயத்தின் கீழ் (Incremental operating cost) செலவு செய்யப்பட்டிருந்தது.	பொறிமுறையினூடாக பெற்றுக்கொள்வதற்கு முயற்சி எடுக்க வேண்டிய போதிலும் அது முடியாதிருந்தது.